










# 2014

# செயலாற்றுகை அறிக்கை

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் - இலங்கை

# உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் செயலாற்றுகை அறிக்கை

# 2014

ஆர்.எம்.ஆர்.டப். மஞ்சநாயக்க

உள்நாட்டு இறைவரி திணைக்களம்

## 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயலாற்றுகையின் பொழிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்திக்காக வருமானத்தினைச் சேகரிக்கும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு தனது பங்களிப்பினை நல்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 514,161 மில்லியனாக இருந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா 21,622 மில்லியன் அதிகமாகும். இது மொத்த அரச வருமானத்திற்கு 43.02% பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் குறித்த ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 5.25% பங்களிப்பினையும் வழங்கியுள்ளது.

வரி இணக்கப்பாடுகளை அதிகரிப்பதற்கான வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளினைக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த முறைமையானது, உள்நாட்டு இறைவரி திணைக்களம் அதன் நோக்கங்களினை நிறைவேற்றிக் கொள்வதற்கு வழி வகுத்துள்ளது.

அரசாங்க வருமானத்திற்கும் பொருளாதாரத்திற்கும் அவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் வரி செலுத்துனர்களுக்கு சிறப்புரிமை அட்டைகளை வழங்கி பாராட்டும் முறைமையானது குறித்த ஆண்டு காலப்பகுதியிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளையில், வரிக் கணக்காய்வுகள், வெளிப்படுத்தப்படாத வருமானம் மற்றும் புரள்வு என்பவற்றினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 281,425 மில்லியன்கள் தொகையுடைய வரியினை அறவீடு செய்ய முடிந்துள்ளது. ரூபா 28,638 மில்லியன் தொகையினை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேலதிக வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

வரி அறவீட்டுக்காக தவறவிடப்பட்ட வரி அறவீட்டுச் சட்டத்திற்கு மேலதிகமாக குறித்த சட்டவாக்கங்களில் விதித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரிச் சட்ட விதிகளின் உரைபெயர்க்கும் குழுவானது, சட்டவாக்கத்தின் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் தேவைப்படும் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் 77 வழக்குகள் தொடர்பான உரைபெயர்ப்புக்களை வழங்கியுள்ளது.

கணிசமான எண்ணிக்கையிலான புதிய வரிக் கோவைகள், தகவல் பிரிவு, வரி செலுத்துனர் சேவைப் பிரிவு, ஏனைய மதிப்பீட்டுப் பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் எடுக்கப்பட்ட ஆரம்பிக்குகைகளுடன் திறக்கப்பட்டிருந்தன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரி செலுத்துனர் சேவைப் பிரிவானது, உதவியினை அல்லது தகவலினைக் கோருகின்ற ஒவ்வொரு ஆளுக்கும் உதவியளிக்கும் வகையிலான அலுவலர்களைக் கொண்டதாக வலுப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதவியினர் அவ்வாறே வரி செலுத்துனர்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் பெருமளவிலான கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் (RAMIS)பூர்வாங்க அறிக்கை மற்றும் கருத்திட்ட திட்டமிடல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், தேவையான உள்ளக கட்டமைப்பு வசதிகளை தாபிப்பதற்கான பெறுகைகள் செயல்முறையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப தகவல்களை பரிமாற்றிக் கொண்டதன் பின்னர் கருத்திட்டம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவற்றின் கீழ் வலையமைப்புடன் இணைக்கப்படுவதற்கு திட்டமிடப்படுகின்ற 23 வெளியக நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் கைச்சாத்திடப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## தூரநோக்கு

வரி செலுத்தும் பொதுமக்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள மற்றும் முழுமையாக தன்னியக்க முறைமையினால் வசதியளிக்கப்பட்ட பதவியினரைக் கொண்டு வரி செலுத்துனர் நட்பு வரி நிருவாக சேவை வழங்குநராக இருத்தல்.

## பணிக்கூற்று

வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்புக்களினை தடுக்கும் அதேவேளை தன்னார்வ இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் வரி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் நியதிகளுக்கு அமைவாக வரிகளைச் சேகரித்தல்; மற்றும்

வரிகளையும் தொடர்புற்ற சட்டங்களையும் நியாயமாகவும் நட்புறவுமிக்கதாகவும் மற்றும் திறமையான முறையிலும் நிர்வகிப்பதன் மூலம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும்முறைமையொன்றில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தலும் அதன் மூலமாகநன்மைபயக்கத்தக்க வரிக் கலாச்சாரம் ஒன்றினைஅதிகரிக்கச் செய்தல்.

## உபாய இலக்குகள்

- வரிச் சட்டங்களுடனான வரி செலுத்துநரின் சுயவிருப்பு இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்காக அதனை ஊக்குவிப்பதில் உதவத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதலும் அவ்விதமான இணக்கப்பாட்டினைக் காட்டாதவர்களைக் கண்டறிதலும் பொருத்தமானதும் உகந்ததுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

- செயற்றிறன்மிக்க வேலை நடைமுறைகள், தொழில்நுட்பம் என்பவற்றைப் பிரயோகித்து கிடைப்பனவிலுள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்றிறனை மேம்படுத்தல்.

- திணைக்களத்தினால் அதனது குறிக்கோளை நிறைவு செய்யும் முகமாக அதன் பதவியணியினர் மேலும் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக முகாமைத்துவம், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வேலை அனுபவம் என்பவற்றின் மூலம் அவர்களது உற்பத்தித் திறனையும் தொழிற்துறைத் திறமையையும் உயர்த்துதல்.

## முதன்மை அலுவலர்கள்

| | |
|---|---|
| **திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க** | **உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்** |
| **திருமதி.எல்.ராமநாயக்க** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>வரிக் கொள்கைகள் ஆலோசகர் – நிதி, திட்டமிடல் அமைச்சு |
| **திருமதி.கே.தஹநாயக்க** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>பணிப்பாளர் நாயகம் – நிதி திட்டமிடல் அமைச்சு<br>தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் |
| **திரு.கே.ஏ.ஜீ.அபயரத்ன** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>புலனாய்வு, பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தகவல் |
| **திருமதி.டப்.அனுலாவதி** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>வரி செலுத்துனர்சேவைகள், மேன்முறையீடு, முத்திரைவரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி |
| **திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>மனித வளங்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி |
| **திரு.ஏ.என்.குருகே** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>பாரிய வரி செலுத்துனர் பிரிவு, நிறுவன வரி Iமற்றும் II,<br>பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு |
| **திருமதி.பி.ரோஹினி** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் |

## சிரேஷ்ட ஆணையாளர்கள்

| | |
|---|---|
| **திருமதி.ஆர்.எம்.பி.எஸ்.கே.ராஜபக்ஷ** | சேகரிப்பு மற்றும் விடுவிப்பு, தவறவிடப்பட்ட வரி அறவீடு தகவல் |
| **திரு.ஏ.ஏ.டி.யு.அபேசிங்க** | மறைமுக வரி நிருவாகம் |
| **செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக** | வரிக் கொள்கை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி, சட்டவாக்கம், வரி முறைமை மற்றும் சர்வதேச விவகாரங்கள், முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் |
| **திரு.ஜே.பி.டி.ஆர்.ஜயசேகர** | தகவல், தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் |
| **திரு.டி.எம்.எஸ்.திசாநாயக்க** | பாரிய வரி செலுத்துனர் பிரிவு - 1 |
| **திரு.எம்.ஜி.சோமச்சந்திர** | மனிதவள அபிவிருத்தி |
| **திருமதி.சி.எச்.வீரசிங்க** | உள்ளக கணக்காய்வு மற்றும் வரி மதிப்பீட்டுக் கட்டுப்பாடு |
| **திருமதி.எச்.எம்.டி.முனசிங்க** | பாரிய வரி செலுத்துனர் பிரிவு - II |
| **திரு.பி.ஜி.கே.சமரதுங்க** | நிறுவன வரி - II |
| **திருமதி.எஸ்.கருணாரத்ன** | செயலகக் கிளை |
| **திரு.ஓ.பி.பி.கே.சிறிசேன** | பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் |
| **திரு.கே.தர்மசேன** | புலனாய்வு |
| **திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்** | மாற்றல் விலையிடல் ஒழுங்கு விதிகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள், வலயம் 1 |
| **திரு.டி.பீ.திசாநயாக்க** | தேகவ, பொசேக, பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு, நிறுத்தி வைத்தல் வரி (வட்டி மீது) வலயம் II |
| **திரு.டி.டி.என்.பி.கோரலேஆரச்சி** | மனித வளங்கள் |
| **திரு.ரி.எம்.தயானந்த** | தகவல் |
| **திரு.டப்.எஸ்.கே. டீ.கொஸ்தா** | பெசேவ மற்றும் இபெசேவ |
| **திரு.எம்.எஸ்.எம்.ஃபுவாட்** | மேன்முறையீடு |
| **திரு.பி.எம்.திசாநாயக்க** | பெசேவ மீளளிப்பு மற்றும் விசேட கணக்காய்வு |
| **திரு.பி.எல்.எஸ்.லியனகே** | வரி செலுத்துனர் சேவைகள், சட்டம் மற்றும் முத்திரைத் தீர்வை |
| **திரு.ஏ.ஏ.தயாரத்ன** | வலயம் III , உபொசேவ, அலகு 1, 2 மற்றும் 3 |

## குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள்

குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகளும் தொடர்புடைய சட்டவாக்கங்களும் பின்வருமாறு;

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| வருமான வரி | 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம். |
| பெறுமதிசேர் வரி(நிதி சேவைகள் மீதான பெசேவ, பெசேவ மீதான முற்பண வரி மற்றும் பெசேவ தேர்ந்தெடுப்பு உள்ளடங்கலாக) | 2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, 2006 ஆம் ஆண்டின் 8 மற்றும் 49 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம். |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண வரிச் சட்டம். |
| தேசக் கட்டுமான வரி | 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசக் கட்டுமான வரிச் சட்டம். |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட வரிச் சட்டம். |
| முத்திரைத் தீர்வை | 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வை சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம். |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி<br>நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம். |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நிதிச் சட்டம். |
| காணி மீதான மாற்றல் வரி | 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம் |

பின்வரும் வரிகள் ஆரம்பத்தில் விதிக்கப்பட்டு தற்பொழுது அவை நீக்கப்பட்டு இருப்பினும் திணைக்களம் அவற்றின் மதிப்பீடு மற்றும் சேகரிப்பு பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| தேசிய பாதுகாப்பு அறவீடு | திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரிச் சட்டம் |
| பொருட்கள் சேவைகள் வரி | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருட்கள், சேவைகள் வரிச் சட்டம் |
| தேசத்தைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பு | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேச பங்களிப்பு சட்டத்தினைப் பாதுகாத்தல் |
| நலன் வரி மீதான மேலதிகக் கட்டணம் | 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மற்றும் 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க செல்வ வரிச் சட்டத்தின் மீதான மிகைக் கட்டணம் |
| வருமான வரி மீதான மேலதிகக் கட்டணம் | திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வருமான வரி சட்டத்தின் மீதான மிகைக் கட்டணம் |
| பற்று வரி | 2003 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச் சட்டம் |
| காணித் தீர்வை | திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணித் தீர்வை சட்டம் |
| புரள்வு வரி (வட மாகாணம்) | திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க புரள்வு வரிச் சட்டம். |

## உள்ளடக்கம்


2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயலாற்றுகையின் பொழிப்பு ........ iii

முதன்மை அலுவலர்கள் ........ vii

குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள் ........ ix

உள்ளடக்கம் ........ xi

பகுதி I மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி ........ 1

அத்தியாயம் 1 மனித வளங்கள் ........ 3

1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவிவகிப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்கள் ........ 5

1.2 பதவி உயர்வுகள் ........ 5

1.3 இளைப்பாறல்கள் ........ 6

1.4 ஒழுக்காற்று நடவடிக்கைகள் ........ 7

1.5 பயிற்சி ........ 7

1.5.1 உள்ளக பயிற்சியளித்தல் ........ 7

1.5.2 வெளிநாட்டு பயிற்சி ........ 8

1.5.3 அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அளிக்கப்பட்டவெளிநாட்டு பயிற்சிகள் ........ 10

பகுதி II வரி நிருவாகம் ........ 11

அத்தியாயம் 2 வருமான சேகரிப்பு ........ 13

2.1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக் கோவைகளின் எண்ணிக்கை ........ 15

2.2 மொத்த வருமான சேகரிப்பு ........ 16

2.3 மொத்த வருமான பாய்ச்சல் ........ 17

2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு ........ 18

2.5 முத்திரைத்தீர்வை, தேசக்கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் ........ 18

2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும் ........ 19

2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு ........ 19

2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு ........ 20

2.9 வருமான வரி சேகரிப்பு ........ 21

2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம் ........ 21

2.9.2 மூலத்தின் அடிப்படையில் வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு ........ 22

2.9.3 வருமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள் ........ 22

2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு ........ 24

2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு ........ 25

2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள் ........ 26

2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு ........ 27

2.11.1 தேசக் கட்டுமான வரி தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள் ........ 28

2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு ........ 28

2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு ........ 28

2.14 நிறுத்தி வைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது) ........ 29

2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு ........ 29

2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு ........ 29

2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு ........ 29

2.18 காணி மீதான மாற்றல் வரி ........ 30

2.19 2010 இலிருந்து 2014 வரைக்கும் உள்நாட்டு இறைவரி சேகரிப்பு ........ 30

அத்தியாயம் 3 செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம் ........ 31

3.1 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு ........ 33

3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம் ........ 33

3.3 உள்ளக கணக்காய்வு ........ 35

அத்தியாயம் 4 தவறவிடப்பட்ட வரிகள் ........ 37

4.1 தவறவிடப்பட்ட வரிகள் ........ 39

4.2 தவறவிடப்பட்ட வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள் ........ 40

4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல் ........ 40

அத்தியாயம் 5 கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள் ........ 41

5.1 கணக்காய்வுகள் ........ 43

5.2 மேன்முறையீடுகள் ........ 43

5.3 பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான மீள் கொடுப்பனவு கணக்காய்வுகள் ........ 44

5.4 அறவீட்டு நடவடிக்கைகள் ........ 44

5.5 மீள் கொடுப்பனவுகள் ........ 44

அத்தியாயம் 6 சர்வதேச உறவுகள் ........ 45

6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள் ........ 47

6.1.1 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பிலான விடயங்கள் ........ 48

6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள் ........ 48

அத்தியாயம் 7 சட்டவாக்கம் ........ 51

7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம் ........ 53

7.2 அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள் ........ 53

7.3 வர்த்தமானி அறிவித்தல்கள் ........ 53

7.4 உரைபெயர்ப்புக் குழு ........ 53

அத்தியாயம் 8 ஏனைய பணிகள் ........ 55

8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு ........ 57

8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள் ........ 57

8.3 பகுப்பாய்வு அறிக்கைகள் ........ 57

8.4 பயிற்சியளித்தல் கிளை ........ 57

8.5 வருமான நிருவாக மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) ........ 58

# பகுதி I

# மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி

# அத்தியாயம் 1

# மனித வளங்கள்

**1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவிவகிப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்கள்**

பின்வரும் அட்டவணை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும் 2014 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு பதவியில் இருப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் காட்டுகின்றது.

**2014.12.31 அன்றுள்ளவாறு திணைக்களத்தின் பதவியணி**

| பதவியணி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | பதவி எண்... | வெற்றிடம் |
|---|---|---|---|
| **உள்நாட்டு இறைவரி சேவை** | | | |
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - |
| பிரதி ஆணையாளர் நாயகம் | 9 | 7 | 2 |
| சிரேஷ்ட ஆணையாளர் | 22 | 22 | - |
| ஆணையாளர் | 90 | 88 | 2 |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர்/பிரதி ஆணையாளர்/பதில் ஆணையாளர் | 1110 | 1020 | 90 |
| சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்/வரி மதிப்பீட்டாளர் | - | 105 | - |
| **ஏனைய சேவைகள்** | | | |
| **இணைந்த சேவைகள்** | | | |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | - |
| கணக்காளர் | 8 | 7 | 1 |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் (Supra) | 3 | 3 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 9 | 9 | - |
| நூலகர் I | 1 | 1 | - |
| நூலகர் III | 1 | - | 1 |
| வரவு செலவுத்திட்ட உதவியாளர் | 2 | 2 | - |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் | 1000 | 540 | 460 |
| போக்குவரத்து அலுவலர் | 1 | - | 1 |
| சாரதி | 74 | 74 | - |
| அலுவலக உதவியாளர் | 319 | 297 | 22 |
| ***ICT Service*** | | | |
| பணிப்பாளர் (ICT) | 1 | - | 1 |
| பிரதி பணிப்பாளர் /பதில் பணிப்பாளர் (ICT) | 6 | 4 | 2 |
| அலுவலர் (ICT) | 12 | 11 | 1 |
| உதவியாளர் (ICT) | 30 | 30 | - |
| **ஏனையவை** | | | |
| பொறியியலாளர் | 1 | 1 | - |
| தொழில்நுட்ப அலுவலர் | 2 | - | 2 |
| கட்டிட மேற்பார்வையாளர் | 1 | - | 1 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 11 | 11 | - |
| வழங்கல் உதவியாளர் | 2 | - | 2 |
| வரவேற்பாளர் | 4 | 3 | 1 |
| களஞ்சிய பொறுப்பாளர் | 2 | - | 2 |
| தச்சன் | 1 | 1 | - |
| **மொத்தம்** | **2724** | **2238** | **591** |

**1.2 பதவி உயர்வுகள்**

- ஆணையாளரான திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க2014ஆகஸ்ட் 01 இலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர்நாயகமாக நியமிக்கப்பட்டார்.
- பின்வரும் சிரேஷ்ட ஆணையாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் பிரதி ஆணையாளர்

நாயகங்களின் கடமைகளை மேற்கொள்வதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளார்கள்.

| பெயர் | பயன்வலுப்பெறும் திகதி |
|---|---|
| திருமதி.கே.தஹநாயக்க | 2014.01.01 |
| திரு.கே.ஏ.ஜீ.அபயரத்ன | 2014.01.01 |
| திருமதி.டப்.அனுலாவதி | 2014.01.01 |
| திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க | 2014.01.01 |
| திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க | 2014.01.01 |
| திரு.ஏ.என்.குருகே | 2014.01.01 |
| திருமதி.ரோஹிணி | 2014.01.01 |

- இருபத்தியிரண்டு ஆணையாளர்கள் சிரேஷ்ட ஆணையாளர்களின் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- இருபத்தியொன்பது சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்கள் ஆணையாளர்களின் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

## 1.3 இளைப்பாறல்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் அலுவலர்கள் சேவையிலிருந்து இளைப்பாறினார்கள்.

- திருமதி.மல்லிகா சமரசேகர
  ஆணையாளர் நாயகம்
- திரு.எச்.பி.ஏ.செனவிரத்ன
  மேலதிக ஆணையாளர் நாயகம்
- திரு.கே.ஏ.பி.களுஆரச்சி
  பிரதி ஆணையாளர் நாயகம்
- திரு.பி.கே.பத்மநாதன்
  ஆணையாளர்
- திரு.எம்.எச்.என்.அமரகோன்
  ஆணையாளர்

### ஏனைய இளைப்பாறல்கள்

| | |
|---|---|
| • பிரதி ஆணையாளர் | 06 |
| • பிரதான கணக்காளர் | 01 |
| • அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| • அலுவலக உதவியாளர் | 06 |

**<u>திருமதிஎம்.சமரசேகர</u>**

திருமதி.எம்.சமரசேகர 2011 டிசம்பர் 26 ஆம் திகதியன்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். இவர் 1978 டிசம்பர் 01 ஆம் திகதி வரி மதிப்பீட்டாளராக இத்திணைக்களத்தில் தனது பணியினை ஆரம்பித்து வரி நிருவாகத்தில் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளையும் வகித்துள்ளார். இவர் இவருடைய பதவிக் காலத்தினுள் 1990 இல் யப்பானில் நடாத்தப்பட்ட வரி விதிப்பனவு பாடநெறி, 2001 இல் மலேசியாவில் இடம் பெற்ற மலேசிய பொது வரி நிருவாக பாடநெறி, 2006 இல் இந்தியாவில் இடம் பெற்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள வரிக் கொள்கை மற்றும் வரி நிருவாக நடைமுறை விடயங்கள் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2010 இல் கொரியாவில் நடாத்தப்பட்ட வருமான நிருவாகம் மற்றும் திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை மீதான நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பனவு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியுள்ளதுடன் பல்வேறு பயிற்சிகளையும் பெற்றுள்ளார். இவர் 2006 இல் யப்பானிலும் 2010 இல் இந்தியாவிலும் இடம் பெற்ற வரி மாநாட்டில் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியுள்ளதுடன் 2012 இல் மலேசியாவில் ஆசிய வரி அதிகாரிகளின் ஒன்று கூடலிலும் 2012 இல் மால்ராவில் இடம் பெற்ற வரி நிருவாகிகளின் பொதுநலவாய கூட்டமைப்பின் 33 ஆவது வருடாந்த தொழில்நுட்ப மாநாட்டிலும் கலந்து கொண்டுள்ளார். இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை உள்ளடங்கலான இறைவரி நிருவாக மேம்படுத்தலுக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள், இவர் ஆணையாளர் நாயகமாக பதவி வகித்த காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டன.

**<u>திரு.எச்.பி.ஏ.செனவிரத்ன</u>**

திரு.எச்.பி.ஏ.செனவிரத்ன வரி மதிப்பீட்டாளராக 1978 இல்திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 2014.03.19 ஆம் திகதியன்று அவர் இளைப்பாறுகின்ற நேரத்தில் அவர் மேலதிக ஆணையாளர் நாயகமாக தொழிற்பட்டுக் கொண்டிருந்தார். திரு.செனவிரத்ன உள்நாட்டு இறைவரிச் சேவையிலுள்ள அனைத்து பதவிகளிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் மொத்தமாக 36 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். அவரின் பதவிக் காலத்தில் 1992 இல் யப்பானின் வரி விதிப்பனவு மீதான கருத்தரங்கு, 1999 இல் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட வரிக் கொள்கைப் பகுப்பாய்விலுள்ள தொழில்நுட்ப ஆற்றல்களை தரமுயர்த்துவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம், 2003 இல் மலேசியாவில் நடாத்தப்பட்ட சர்வதேச கொடுக்கல் வாங்கலின் வரி விதிப்பனவு தொடர்பான வரி நிருவாகிகள் செயலமர்வின் பொதுநலவாய கூட்டமைப்பு, 2004 இல் பிரான்ஸில் இடம் பெற்ற வரி விதிப்பனவு மீதான உலகளாவிய கூட்டமைப்பின் 9 ஆவது வருடாந்த கூட்டம், 2005 இல் பரிஸில் இடம் பெற்ற வரி உடன்படிக்கைகள் மீதான 10 ஆவது வருடாந்த சர்வதேச வரி விதிப்பனவு கூட்டம் மற்றும் 2012 இல் மால்ராவில் இடம் பெற்ற வரி நிருவாகிகள் முகாமைத்துவ பொதுநலவாய கூட்டமைப்பின் குழுக் கூட்டம் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பனவு நிகழ்ச்சித் திட்டங்களிலும் பங்குபற்றியுள்ளார். திரு.செனவிரத்ன அவரின் பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அநேகமாக அனைத்து இரட்டை வரி விதிப்பனவு உடன்படிக்கைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் உள்நாட்டு இறைவரித்

திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார். மேலும் இவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் வரி நியதிச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளின் உரைபெயர்ப்புக்கு பொறுப்புவாய்ந்த வரி உரைபெயர்ப்புக்கான குழுவின் தவிசாளராகவும் செயற்பட்டுள்ளார். இவர் இலங்கையில் 2011 இல் நடாத்தப்பட்ட CATA மாநாடு மற்றும் 2012 இல் நடாத்தப்பட்ட சார்க் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு காரணகர்த்தாவாக இருந்துள்ளதுடன், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கான உள்ளக பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அளப்பரிய சேவையினையும் ஆற்றியுள்ளார்.

**திரு.கே.ஏ.பி.களுஆராச்சி**

1980 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கலந்து கொண்ட திரு.கே.ஏ.பி.களுஆராச்சி 2011 ஜனவரி 08 ஆம் திகதியன்று பிரதி ஆணையாளர் நாயகம் பதவியினை அடைந்துள்ளார். இவர் 2014 டிசம்பர் 08 ஆம் திகதியன்று சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். திரு.கே.ஏ.பி.களுஆராச்சி தனது பதவிக் காலத்தினுள் 1999 இல் அமெரிக்காவில் இடம் பெற்ற வரிக் கொள்கை பகுப்பாய்விலுள்ள தொழில்நுட்ப ஆற்றல்களை தரமுயர்த்துவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள், 2007 இல் இந்தியாவில் நடாத்தப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள வரிக் கொள்கை மற்றும் வரி நிருவாக நடைமுறை விடயங்கள் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம், 2007 இல் இந்தியாவில் NADT இல் புலனாய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் விசேடமாக்கப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2013 இல் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட இலத்திரனியல் ஆட்சி முறை மற்றும் மாற்றல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பனவு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றி பல்வேறு பயிற்சிகளையும் பெற்றுள்ளார். மேலும், இவர் 2010 இல் நைஜீரியாவில் இடம் பெற்ற 31 ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாடு, 2012 இல் அமெரிக்காவில் நடாத்தப்பட்ட சர்வதேச பிசுக்கால் கூட்டமைப்பின் 66 ஆவது மாநாடு மற்றும் 2013 இல் குவாண்டாவில் இடம் பெற்ற 34 ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாட்டிலும் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார். இவர் நீண்ட காலமாக நிறுவன வரியினை நிருவகிப்பதில் அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார்.

### 1.4 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

| வகுதி | வரி மதிப்பீட்டாளர் | வரி உத்தியோகத்தர் |
|---|---|---|
| 2014.01.01 இல் உள்ளவாறான மீதி | 9 | - |
| குறித்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவை | 1 | - |
| குறித்த ஆண்டில் நிறைவு பெற்றவை | - | - |
| 31.12.2014 இல் உள்ளவாறான மீதி | 10 | - |

### 1.5 பயிற்சி

#### 1.5.1 உள்ளக பயிற்சியளித்தல்

திணைக்களத்தின் பயிற்சியளித்தல் கிளையானது, வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியளித்தல் பாடநெறிகளையும் பரீட்சைகளையும் கிரமமாக நடாத்தி வருகின்றது. இவை அவர்களின் அறிவினை விருத்தி செய்வதனையும் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துவதனையும் குறிப்பாக வரி விதிப்பனவு மற்றும் கணக்கீட்டு அறிவினை விருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பாடநெறிகளானவை, உத்தியோகத்தர்கள் அவர்கள் வகிக்கும் வகுப்புக்களில் அவர்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான பல்வேறு சேவைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த விடயங்களில் பயிற்சியினை அளிக்கும் வகையிலும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அறிவினை பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பயிற்சியளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விபரம் பின்வருமாறு.

- **பிரதி ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கானவை**

| பாடநெறி/பரீட்சை | பயிலுனர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| முதலாவது திணைக்களப் பரீட்சைக்காக வகுப்பு II தரம் II இல் வரி மதிப்பீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் | 04 | |
| இரண்டாவது திணைக்களப் பரீட்சைக்காக வகுப்பு II தரம் II இல் வரி மதிப்பீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் | 60 | |
| பிரதி ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கான கணனி அடிப்படையிலான கணக்கீட்டுப் பொதிகள் மீதான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 64 | |
| வகுப்பு II தரம் II இலுள்ள வரி மதிப்பீட்டாளர்களுக்கான இரண்டாவது திணைக்களப் பரீட்சை | 1 ஆவது தடவை | 04 |

- **கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவை**

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரி நியதிச்சட்டங்கள் மற்றும் அது தொடர்பான வழிகாட்டுதல்களின் பிரயோகம் தொடர்பில் விசேட அறிவினை அளிப்பதற்கான வழமையான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக மேலும் பல நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கம் குறித்த நியதிச்சட்டங்கள் மற்றும் நியமங்கள் தொடர்பிலான அறிவினை அளிப்பதேயாகும்.

| விடயம் | குறித்த ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு/ செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சேவை முடிவுறுத்தல் பயன்களின் புதிய உழைக்கும் பொழுது செலுத்தும் வரி வருடாந்த வெளிப்படுத்தலும் அட்டவணைகளும் | 1 | 150 |
| கணக்காய்வுகளை நடாத்துவதில் வரி செலுத்துனர்களுடன் சாதகமான தொடர்பினை ஏற்படுத்துதல் | 1 | 42 |
| மாற்றல் விலையிடல் கைக்கெட்டிய விலையினை நிர்ணயித்தல் | 1 | 52 |
| மாற்றல் விலையிடல் கைக்கெட்டிய விலையினை நிர்ணயித்தல் | 1 | 72 |
| மாற்றல் விலையிடல் | 1 | 46 |
| IFRS | 1 | 53 |
| சர்வதேச வரி விதிப்பனவு | 1 | 53 |

### 1.5.2 வெளிநாட்டு பயிற்சி

சிறந்த வரி நிருவாகிகளாக அலுவலர்களின் உயர் தொழில் மட்டத்தினைப் பேணும் பொருட்டு வரிச்சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள மிகச் சிறந்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் அல்லது செயலமர்வுகளில் திணைக்களத்தின் பல்வேறு அதிகாரிகளும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| | அலுவலரின் பெயரும் பதவியும் | நிகழ்ச்சித்திட்ட பெயர்/கருத்தரங்கு/ செயலமர்வு | பயிற்சி வழங்கிய நாடு | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.கே.தஹநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | ஆசிய நாடுகளுக்கான ஐந்தாவது உயர் மட்ட வரி மாநாடு | யப்பான் | 21.04.2014–23.04.2014 |
| 2 | திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | மனிதவள மாற்றீடு: மனிதவளத்திற்கும் நிறுவனத்திற்குமிடையிலான இயக்குதிறன் ஒழுங்கமைப்பு | ஐக்கிய இராச்சியம் | 07.07.2014-11.07.2014 |
| 3 | திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | இலத்திரனியல் ஆட்சிமுறை பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் | மலேசியா | 07.09.2014-09.09.2014 |
| 4 | திரு.ஏ.என்.குருகே<br>பிரதி ஆணையாளர் நாயகம் | ஆசிய வரி அதிகாரிகளின் ஒன்றுகூடல் | இந்தோனேசியா | 03.06.2014-05.06.2014 |
| 5 | திரு.ஏ.ஏ.டி.யு.அபேசிங்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-14.11.2014 |
| 6 | செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக<br>பிரதி ஆணையாளர் நாயகம் | உயர் மாற்றல் விலையிடல் தொடர்பான ஆய்வு கற்கை | மலேசியா | 01.12.2014-05.12.2014 |
| 7 | திரு.ஜே.பி.டி.ஆர்.ஜயசேகர<br>பிரதி ஆணையாளர் நாயகம் | இலத்திரனியல் ஆட்சிமுறை பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் | மலேசியா | 07.09.2014-09.09.2014 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | திரு.பி.ஜி.கே.சமரதுங்க<br>சிரேஷ்ட ஆணையாளர் | டிஜிட்டல் உலகளாவிய பொருளாதாரத்திலுள்ள பெசேவ இன் எதிர்காலம் தொடர்பான மாநாடு | ஒஸ்ரியா | 24.09.2014 -<br>26.09.2014 |
| 9 | திரு.ஓ.பி.பி.கே.சிறிசேன<br>சிரேஷ்ட ஆணையாளர் | ஆசிய வரி அதிகாரிகளின் ஒன்றுகூடல் | இந்தோனேசியா | 03.06.2014-<br>05.06.2014 |
| 10 | திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்<br>சிரேஷ்ட ஆணையாளர் | அடிப்படை இல்லாதொழிப்பும் இலாப மாற்றீடும் | கொரியா | 20.02.2014 -<br>21.02.2014 |
| 11 | திரு.டி.பீ.திசாநாயக்க<br>சிரேஷ்ட ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 12 | திரு.கே.டி.ஏ.பி.கோரலேஆரச்சி<br>சிரேஷ்டஆணையாளர் | IRBM – OECD:MAC மற்றும்தன்னியக்கEOI இன்அனுகூலங்களைப்பெறுதல் | மலேசியா | 17.02.2014 -<br>21.02.2014 |
| 13 | திரு.கே.டி.ஏ.பி.கோரலேஆரச்சி<br>சிரேஷ்ட ஆணையாளர் | மனிதவள மாற்றீடு: மனிதவளத்திற்கும் நிறுவனத்திற்குமிடையிலான இயக்குதிறன் ஒழுங்கமைப்பு | ஐக்கிய இராச்சியம் | 07.07.2014-<br>11.07.2014 |
| 14 | திரு.கே.டி.ஏ.பி.கோரலேஆரச்சி<br>சிரேஷ்ட ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 15 | திரு.பி.எல்.எஸ்.லியனகே<br>சிரேஷ்ட ஆணையாளர் | அடிப்படை இல்லாதொழிப்பும் இலாப மாற்றீடும் | கொரியா | 20.02.2014 -<br>21.02.2014 |
| 16 | திரு.ஜே.ரத்நாயக்க<br>சிரேஷ்ட ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 17 | திரு.ஈ.எஸ்.த சொய்சா<br>சிரேஷ்ட ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 18 | திரு.எம்.ஜி.குணசிறி<br>ஆணையாளர் | வரி நிருவாகம் தொடர்பில் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் செயலமர்வு | பிலிப்பைன்ஸ் | 10.06.2014-<br>11.06.2014 |
| 19 | திருமதி.டி.எம்.பி.கணேபொல<br>ஆணையாளர் | இணைந்த IRBM – OECD: உயர் கணக்காய்வு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் | மலேசியா | 05.05.2014-<br>09.05.2014 |
| 20 | திரு.எம்.எல்.எம்.தாஹிர்<br>ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 21 | திரு.யு.பி.எஸ்.ஏ.ஜயலத்<br>ஆணையாளர் | வரி நிருவாகம் தொடர்பில் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் செயலமர்வு | பிலிப்பைன்ஸ் | 10.06.2014-<br>11.06.2014 |
| 22 | திரு.எம்.டி.ஜே.எம்.தேவபிரிய<br>ஆணையாளர் | IRBM – OECD: நிதிச் சந்தைகளின் வரி விதிப்பனவு | மலேசியா | 25.08.2014 -<br>29.08.2014 |
| 23 | திரு.ரி.கருணாதாச<br>ஆணையாளர் | இணைந்த IRBM – OECD: உயர் கணக்காய்வு பல்தேசிய தொழில் முயற்சிகள் | மலேசியா | 07.04.2014-<br>11.04.2014 |
| 24 | திரு.டி.யு.ஏ.ஜயவர்தன<br>ஆணையாளர் | இலத்திரனியல் ஆட்சிமுறை பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் மீதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் | மலேசியா | 07.09.2014-<br>09.09.2014 |
| 25 | திருமதி.ஆர்.கே.சி.சித்ரலதா<br>ஆணையாளர் | தகவல் பரிமாற்றம் மற்றும் பாரிய வரி செலுத்துனர் பிரிவு தொடர்பான சார்க் பயிற்சியளித்தல் கருத்தரங்கு | பாகிஸ்தான் | 7.04.2014-<br>11.04.2014 |
| 26 | திரு.எம்.கணேசராஜா<br>ஆணையாளர் | 35 ஆவது வருடாந்த CATA தொழில்நுட்ப மாநாடு | பொட்ஸ்வானா | 10.11.2014-<br>14.11.2014 |
| 27 | திருமதி.எஸ்.லியனகே<br>ஆணையாளர் | பெயர்த்தெடுத்தல் கைத்தொழிலின் மாற்றல் விலையிடல் விடயங்கள் | மலேசியா | 22.09.2014-<br>26.09.2014 |
| 28 | திருமதி.ஆர்.பி.எச்.பெர்னாண்டோ<br>ஆணையாளர் | IRBM – OECD: உயர் மாற்றல் விலையிடல் தர்க்க ஆய்வுகள் | மலேசியா | 1.12.2014-<br>5.12.2014 |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | திரு.என்.எம்.ஏ.கே.பீ.நாபன<br>பிரதி ஆணையாளர் | முகாமைத்துவ தகைமையினை அடையப் பெறல் | ஐக்கிய இராச்சியம் | 28.07.2014 - 07.09.2014 |
| 30 | திரு.எம்.ஏ.பிரியங்க<br>பிரதி ஆணையாளர் | MPM இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | மலேசியா | 18.05.2014 - 31.05.2014 |
| 31 | திருமதி.சிறியாணி ஜயசிங்க<br>பிரதி ஆணையாளர் | வரிப் பகுப்பாய்வும் வருமான தெரிவு கூறலும் | ஐக்கிய அமெரிக்கா | 22.06.2014 - 18.07.2014 |
| 32 | திரு.எச்.எஸ்.ஜே.ரணசிங்க<br>பிரதி ஆணையாளர் | வரிப் பகுப்பாய்வும் வருமான தெரிவு கூறலும் | ஐக்கிய அமெரிக்கா | 22.06.2014 - 18.07.2014 |
| 33 | திரு.என்.டப்.பி.ஏ.எஸ்.நாணயக்கார<br>உதவி ஆணையாளர் | பொதுநலவாய வரி நிருவாகிகள் பாடநெறி | ஐக்கிய இராச்சியம் | 28.07.2014- 05.09.2014 |
| 34 | திரு.பி.ஜி.லலித்<br>உதவி ஆணையாளர் | தகவல் பரிமாற்றம் மற்றும் பாரிய வரி செலுத்துனர் பிரிவு தொடர்பான சார்க் பயிற்சியளித்தல் கருத்தரங்கு | பாகிஸ்தான் | 07.04.2014 - 11.04.2014 |
| 35 | திரு.ஏ.கே.ஹெட்டிஆரச்சி<br>உதவி ஆணையாளர் | தகவல் பரிமாற்றம் மற்றும் பாரிய வரி செலுத்துனர் பிரிவு தொடர்பான சார்க் பயிற்சியளித்தல் கருத்தரங்கு | பாகிஸ்தான் | 07.04.2014 - 11.04.2014 |
| 36 | திரு.பி.ரி.ரி.பி.ஜயசிங்க<br>உதவி ஆணையாளர் | உயர் கணக்காய்வு பல்தேசிய தொழில் முயற்சிகள் | மலேசியா | 07.04.2014 - 11.04.2014 |

### 1.5.3 அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அளிக்கப்பட்டவெளிநாட்டு பயிற்சிகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையின் கீழ் இ – ஆட்சிமுறை மற்றும் மாற்றல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டமானது சிங்கப்பூரில் நடாத்தப்பட்டதுடன், அதற்கிணங்க,

291 அலுவலர்கள் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) மீதான விசேட பயிற்சியளித்தல்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தார்கள்.

# பகுதிII

# வரி நிருவாகம்

# அத்தியாயம் 2

# வருமான சேகரிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அரசாங்க வருமான சேகரிப்பில் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 514,160,713,222/- (அரசிறை கொள்கை திணைக்களத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு வரி, மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக்கட்டுமான வரியின் கீழான வரி சேகரிப்பின் 1/3 உள்ளடங்கலாக) இனை தேறிய வருமானமாக சேகரித்துள்ளது. பல்வேறுபட்ட வரிகளின் சேகரிப்புக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணப்பட்டு வந்த மொத்த கோவைகளின் எண்ணிக்கையானது 2014.12.31 ஆந் திகதியன்று 625,376 ஆக இருந்துள்ளது.

### 2.1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக் கோவைகளின் எண்ணிக்கை

ஆண்டு இறுதியின் போது வரி செலுத்துனர்களாக இத்திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

| 2014.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் எண்ணிக்கையும் வரிக்கோவைகளும் | | |
|---|---|---|
| **வருமான வரி** | | |
| ***<u>கம்பனிகள்</u>*** | | |
| வதிவுள்ள கம்பனிகள் | 38,502 | |
| வதிவற்ற கம்பனிகள் | 969 | |
| அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமை நிறுவனங்கள் | 64 | 39,535 |
| ***<u>கம்பனிகளல்லாதவை</u>*** | | |
| தனிப்பட்டவர்கள் | 148,720 | |
| பங்குடமையாளர்கள் | 14,515 | |
| ஆட்களின் குழுமங்கள் | 1,832 | |
| உ.பொ.செ. திட்டத்தின் கீழ் வருமான வரி செலுத்தும் ஊழியர்கள் (2013.03.31 இல் உள்ளவாறு)* | 354,758 | 519,825 |
| **மொத்த வருமான வரி செலுத்துனர்கள்** | | **559,360** |
| **<u>பிற வரி செலுத்துனர்கள்</u>** | | |
| **பொ.சே.கட்டணத்திற்காக** பதிவு செய்யப்பட்ட ஆட்கள் மற்றும் பங்குடமையாளர்கள்(ESC) | 3,515 | |
| **பெறுமதிசேர் வரிக்காக** பதிவு செய்த ஆட்கள் (VAT) | 15,330 | |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரிக்காக** பதிவு செய்த ஆட்கள் | 176 | |
| **விருப்பு பெ.சே.வரிக்காக** பதிவு செய்த ஆட்கள் | 74 | |
| **தேசக் கட்டுமான வரிக்காக** பதிவு செய்த ஆட்கள் (NBT) | 22,381 | |
| **நிதிச் சேவைகள் மீதான தேசக் கட்டுமான வரிக்காகப்** பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 175 | |
| பந்தய அறவீட்டு கோவைகள் | 1,067 | |
| சூதாட்ட அறவீட்டு கோவைகள் | 5 | |
| **மொத்த பிற வரி செலுத்துனர்கள்** | | **42,723** |
| **உபொசே. வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்கள்** | 12,104 | |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி **(நிறுத்திவைத்தல் முகவர்கள்)** | 2,628 | |
| **விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள்** மீதான நி.வை.வரி **(முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்)** | 84 | |
| நிர்மாண அறவீடு | 304 | |
| முத்திரைத் தீர்வை(முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 8,173 | **23,293** |
| **2014.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் மொத்த எண்ணிக்கையும் வரிக்கோவைகளும்** | | **625,376** |

**45,778 அரசாங்க ஊழியர்கள் உள்ளடங்கலாக ஆனால், ஊழியர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணப்படுத்தப்படாத வெளிப்படுத்துகைகளிலுள்ள ஊழியர்கள் உள்ளடங்கமாட்டார்கள்.*

***குறிப்புக்கள்;***

i. ஊழியரொருவருக்கு பிற ஏதேனும் வருமானம் இருந்தாலன்றி உழைக்கும் போது செலுத்தும் வரித் திட்டத்தின் கீழ் கழிப்பனவு செய்யப்பட்ட சம்பளத்திற்கான வரி தொடர்பில் பொதுவாக தனியான கோவையொன்று இத்திணைக்களத்தில் பேணப்படுவதில்லை.

ii. இறுதி வரியாக மூலத்தில் வரி விதிக்கப் பெறுகின்ற வருமானத்தினைக் கொண்டுள்ள தனி நபர்கள் (வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்கிலாபங்கள் போன்றவற்றின் மீதான வட்டி போன்றவை) ஒருங்கிணையாத கோவைகளின் வகையீட்டினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 192 எண்ணிக்கையினைக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மொத்த எண்ணிக்கையினைக் கொண்ட கோவைகளினுள் உள்ளடங்கியுள்ளன.

## 2.2 மொத்த வருமான சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான சேகரிப்பான ரூபா 514,161 மில்லியனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 21,622 மில்லியன் அதிகரிப்பினை காட்டுகின்றது. இந்த அடைவானது பிரதானமாக, இணக்கப்பாட்டின் வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கலுக்கான வரி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவே சாத்தியமாகியுள்ளது. பொறுப்புக்கள் மற்றும் வரிகளின் சேகரிப்பு தொடர்பில் வரி செலுத்துனர்களின் மதிப்பீட்டினை இனங்காண்பதானது குறித்த அதிகரிப்பினை மேலும் தீவிரமாக்குவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

குறித்த ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு இறைவரி விகிதாசாரம் 43.02% ஆக இருந்துள்ளது. ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகைகளின் கீழான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமான சேகரிப்பானது இத்தகைய அடைவின் 84.93% இனைக் குறிப்பிடுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெசேவ சேகரிப்பானது ரூபா 20,228 மில்லியனால் அதிகரித்துள்ளது. சுங்க நுழைவாயிலில் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களின் மீதான பெசேவ விலக்களிப்பு நீக்கப்பட்டமை வழங்கல்களின் மொத்தப் பெறுமதியின் 25% இற்கு பெசேவ விலக்களிப்புத் தொகையானது மட்டுப்படுத்தப்பட்ட அதேவேளையில், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரத்திற்கு ஏற்புடைய காலாண்டுப் புரள்வானது 500 மில்லியனிலிருந்து 250 மில்லியனுக்கு குறைக்கப்பட்டமை போன்றவை இந்த அதிகரிப்புக்கான காரணமாக அமைந்துள்ளன.

2013 இல் 40.42% ஆக இருந்துள்ள மொத்த வருமானத்தின் வீதாசாரமான வருமான வரி சேகரிப்பானது, 2014 இல் 37.33% இற்கு வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில் முன்னைய ஆண்டில் ரூபா 199,070 மில்லியனாக இருந்த பெயரளவிலான நியதிகள் 2014 இல் ரூபா 191,960 இற்கு 3.57% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. கையேற்குகைகளின் வேறுபட்ட வகைகளினைக் கொண்டிருக்கின்ற வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் புதிதாக அறுமுகப்படுத்தப்பட்டதுடன் இணைந்து ஏற்கனவே தொழிற்பாட்டிலுள்ள முதலீடுகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் என்பன இத்தகைய வீழ்ச்சிக்கான காரணமாக அமைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவனம் அல்லது நிறுவனமல்லா வருமான வரியிலிருந்தான வருமானம் மற்றும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில், உபொசெவ மற்றும் பங்கிலாப வரி என்பன அதிகரித்துள்ளது. 2013 இல் ரூபா 77,679 மில்லியனாகக் காணப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியிலிருந்தான வருமானமானது 2014 இல் ரூபா 69,402 மில்லியனுக்கு பெயரளவிலான நியதிகளில் 11.92% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பிரதானமாக, உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்களில் மேலும் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் 2014 இல் அரசாங்க பிணை முறிகளின் வழங்குகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் காரணமாகவே ஏற்பட்டது.

ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழான வருமான ஒப்பீடானது அட்டவணை 02 இல் தரப்பட்டுள்ளதுடன் வரைபடம் 01 இன் மூலமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சலானது அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அது வரைபு 02 இன் மூலமாக விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 02 – மொத்த வருமான சேகரிப்பு – 2014**

| வரி வகைகள் | வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) | வருமான சேகரிப்பு ரூபா | மதிப்பீட்டில் சேகரிப்பின் விகிதம் % | மொத்த வருமான சேகரிப்பின் விகிதம் % |
|---|---|---|---|---|
| வருமான வரி | 256,000,000,000 | 191,960,050,670 | 74.98% | 37.33% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 8,400,000,000 | 6,154,508,746 | 73.27% | 1.20% |
| பற்று வரி | - | - | - | |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1,500,000,000 | 815,175,141 | 54.35% | 0.16% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 2,200,000,000 | 2,048,048,604 | 93.09% | 0.40% |
| பெறுமதிசேர் வரி | 290,000,000,000 | 237,915,432,907 | 82.04% | 46.27% |
| பொருட்கள் சேவைகள் வரி | - | 3,459,764 | - | 0.00% |
| புரள்வு வரி | 30,000,000 | 472,185,201 | 1573.95% | 0.09% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | - | 13,772,420 | - | 0.00% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 1,000,000,000 | 841,828,584 | 84.18% | 0.16% |
| தேசக் கட்டுமான வரி | 45,600,000,000 | 65,353,982,522 | 143.32% | 12.71% |
| முத்திரைத் தீர்வை | - | 7,918,141,767 | - | 1.54% |
| காணி வரி | 600,000,000 | 579,471,620 | 96.58% | 0.11% |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 40,000,000 | 84,655,276 | 47.25% | 0.02% |
| **மொத்த வருமான சேகரிப்பு** | **605,370,000,000** | **514,160,713,222** | **84.93%** | **100.00%** |

*மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக் கட்டுமான வரி சேகரிப்பு தொகை ரூபா - 20,770,860,807.

** மாகாண சபைக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை சேகரிப்பு தொகை ரூபா –7,918,141,767.

***அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட சமூகப் பொறுப்பு அறவீடு சேகரிப்பு தொகை ரூபா - 84,655,276.




## 2.3 மொத்த வருமான பாய்ச்சல்

**அட்டவணை 03 - மொத்த வருமான பாய்ச்சல் 2014**

| மாதம் | வருமான சேகரிப்பு(சபொஅ உள்ளடங்கலாக)ரூபா | திரட்டிய வருமான சேகரிப்பு ரூபா |
|---|---|---|
| ஜனவரி | 38,235,887,209.12 | 38,235,887,209.12 |
| பெப்ரவரி | 44,873,589,332.40 | 83,109,476,541.52 |
| மார்ச் | 34,617,564,908.51 | 117,727,041,450.03 |
| ஏப்ரல் | 42,007,850,601.47 | 159,734,892,051.50 |
| மே | 43,860,193,149.91 | 203,595,085,201.41 |
| ஜூன் | 45,623,696,586.26 | 249,218,781,787.67 |
| ஜூலை | 46,528,129,586.90 | 295,746,911,374.57 |
| ஆகஸ்ட் | 47,389,362,121.50 | 343,136,273,496.07 |
| செப்டெம்பர் | 46,801,508,410.39 | 389,937,781,906.46 |
| ஒக்டோபர் | 43,591,791,521.19 | 433,529,573,427.65 |
| நவம்பர் | 43,231,526,754.82 | 476,761,100,182.47 |
| டிசெம்பர் | 37,399,613,040.28 | **514,160,713,222.75** |



## 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு

| வரி வகை | 2014 வருமான சேகரிப்புரூபா: | 2013 வருமான சேகரிப்புரூபா: | சேகரிப்பில் உள்ளவாறான அதிகரிப்பு/ வீழ்ச்சி% |
|---|---|---|---|
| வருமான வரி | 191,960,050,670 | 199,070,030,704 | -3.57% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,154,508,746 | 6,595,600,863 | -6.69% |
| பற்று வரி | | (83,401) | -100.00% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 815,175,141 | 591,870,451 | 37.73% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 2,048,048,604 | 1,197,409,071 | 71.04% |
| பெறுமதிசேர் வரி | 237,915,432,907 | 217,686,923,042 | 9.29% |
| பொருட்கள் சேவைகள் வரி | 3,459,764 | 15,976,746 | -78.35% |
| புரள்வு வரி | 472,185,201 | 218,080,060 | 116.52% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 13,772,420 | 2,149,612 | 540.69% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 841,828,584 | 750,907,497 | 12.11% |
| தேசக் கட்டுமான வரி | 65,353,982,522 | 59,397,332,038 | 10.03% |
| முத்திரைத் தீர்வை | 7,918,141,767 | 6,884,387,291 | 15.02% |
| காணி வரி | 579,471,620 | 96,741,230 | 498.99% |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 84,655,276 | 32,106,064 | 163.67% |
| **மொத்த வருமான சேகரிப்பு** | **514,160,713,222** | **492,539,431,267** | **4.39%** |




## 2.5 முத்திரைத்தீர்வை, தேசக்கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல்

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட உரிய சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட பின்வரும் வருமான வகையீடுகள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேசக்கட்டுமான வரி | 33.33% |
| முத்திரைத் தீர்வை | 100% |

அட்டவணை 04 ஆனது 2014 இல் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமான வரி உரிய வரிகளின் மொத்தத் தொகையையும் காட்டுகின்றது.

| அட்டவணை 04 – வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2014 | | | |
|---|---|---|---|
| | மொத்த சேகரிப்பு (ரூபா) | மாகாண சபைகளுக்கு மாற்றல் தொகை (ரூபா) | % |
| தேசக் கட்டுமான வரி | 65,353,982,522.00 | 20,770,860,807.00 | 33.33% |
| முத்திரைத் தீர்வை | 7,918,141,767.00 | 7,918,141,767.00 | 100% |

## 2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும்

உத்தியோகபூர்வ வரி மதிப்பீடுகளின் மூலமான மொத்த சேகரிப்பில் அநேகமாக முழுமையாக பங்களிப்புச் செய்த சுய மதிப்பீடுகளுக்கான கொடுப்பனவுகள் (இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி நீங்கலாக) குறித்த ஆண்டிற்கான மொத்த வருமான வரி திரட்டின் 4% ஆக மாத்திரம் அமைந்திருந்தது. இது சுய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருமானத்தினை சேகரிக்கும் அதன் நோக்கின் முதன்மைப் பகுதியாக சுய இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் வெற்றியினைக் காட்டுகின்றது. இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வெற்றிக்கான வசதிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அட்டவணை 05 ஆனது தொகைகளுக்கிடையிலான ஒப்பீட்டினைக் காட்டுகின்றது.

| அட்டவணை 05 :- சுய மதிப்பீடு மற்றும் ஏனையவற்றின் அடிப்படையிலான சேகரிப்பின் ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012(ரூபா'000) | | 2013(ரூபா'000) | | 2014(ரூபா'000) | |
| | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற |
| வருமான வரி | 152,640,354 | 5,088,549 | 189,657,462 | 9,412,569 | 181,977,746 | 9,982,305 |
| பெசேவ(இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 101,816,629 | 3,370,532 | 117,622,485 | 3,474,351 | 129,744,521 | 5,890,227 |
| தேகவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 30,496,246 | 3,233,290 | 35,840,240 | 1,113,648 | 39,800,767 | 1,791,628 |
| ஏனையவை | 23,485,987 | 479,049 | 15,849,578 | 535,568 | 143,486,800 | 1,486,719 |
| **மொத்தம்** | **308,439,216** | **12,171,420** | **358,969,765** | **14,536,136** | **495,009,834** | **19,150,879** |
| மொத்த வருமானத்தின் நூற்று வீதம் % (இறக்குமதிகள் மீதான பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக) | 96% | 4% | 96% | 4% | 96% | 4% |

## 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு

அட்டவணை 06 ஆனது 2014 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 04 ஆனது இத்தகைய பங்களிப்புக்களையும் விபரிக்கின்றது. 2014 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,195,206 மில்லியனுக்கு (நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை –2014) அதிகரித்துள்ளதுடன் மொத்த அரசாங்க வருமானத்திலிருந்தான 43.02% பங்களிப்பினையும் பதிவு செய்துள்ளது.

உள்நாட்டு மொத்த உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளதுடன், 2014 இல் 5.25 வீதத்தினைக் காட்டியுள்ளது. வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான வரி வீதங்களின் அறிமுகமானது விகிதாசார வீழ்ச்சிப் போக்கிற்கு காரணமாக அமையலாம்.

| அட்டவணை 06 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | அரசாங்க வருமானம்ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்புரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
| 2010 | 817,280 | 422,512 | 51.69% | 5,604,104 | 7.54% |
| 2011 | 967,862 | 443,830 | 45.86% | 6,544,009 | 6.78% |
| 2012 | 1,051,461 | 443,456 | 42.18% | 7,582,376 | 5.85% |
| 2013 | 1,137,447 | 492,539 | 43.30% | 8,674,230 | 5.68% |
| 2014 | 1,195,206 | 514,161 | 43.02% | 9,784,672 | 5.25% |

மூலம்: - * நிதி திட்டமிடல் அமைச்சு(ஆண்டறிக்கை) **இலங்கை மத்திய வங்கி(ஆண்டறிக்கை)

வரைபு 04
அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும்




## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிறப்புரிமை அட்டைகளை (தங்கம் மற்றும் வெள்ளி) பரிசளித்தல், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது வரிச் சலுகைகளை வழங்குதல், முன்கூட்டிய வரிக் கொடுப்பனவுகள் மீது கழிவுகள் வழங்குதல் போன்ற சுய இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் தனிநபர் வரி செலுத்துனர்களுக்கு பயனளிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட்டன. அதற்கிணங்க, 2013/2014 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள ஒருங்கிணைந்த வருமான வரி விபரத்திரட்டுக்களை நிரப்பும் வீதாசாரமானது42% ஆகஇருந்துள்ளதுடன் உரிய திகதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 57% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது ஒருங்கிணைந்த துறையில் 65% இல் இருந்துள்ளது.

ஒருங்கிணைவில்லா துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 53% ஆக இருந்துள்ளதுடன் உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 61% ஆகவும் இருந்துள்ளது. ஒருங்கிணைவில்லா துறையில் உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 64% இல் இருந்துள்ளது.

அட்டவணை 07 ஆனது உரிய திகதியிலானதும் 2009/2010 இலிருந்து 2013/2014 வரையிலான ஆண்டுகளின் உரிய திகதியிலிருந்தான ஒரு மாத காலத்திலுள்ளானதுமான வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீத வரியினைக் காட்டுகின்றது. அட்டவணை 08 ஆனது ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாட்டின் வீத வரிகளைக் காட்டுகின்றது.

அனைத்து வரிகளினதும் திரும்பல் இணக்க வீதமானது சுய மதிப்பீட்டு வரி முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இல்லாத போதிலும்கூட பெரும்பாலும் நிலையானதாகவே காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வரி விதிப்பனவு குறுமட்டத்தினை அதிகரிப்பதன் காரணமாக பெரும்பாலும் கவனத்தில் கொள்கின்ற ஆண்டில் பெசேவ மற்றும் பொசேக ஆகியவற்றில் காணப்படுகின்ற வரி வீதத்தின் கணிசமான வீழ்ச்சியானது அத்தகைய சூழ்நிலைகளில் தேவையில்லாத வரி விபரத்திரட்டுக்களின் சமர்ப்பித்தலினை தவறாகப் புரிந்து கொள்வதுடன் சில வரி செலுத்துனர்கள் விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பிக்காமைக்கும் ஏதுவாக அமைகின்றது. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது திரும்பல் இணக்கப்பாட்டினை அடைவதற்கான நடவடிக்கைகளினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அட்டவணை 07– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2009/2010–2013/2014

| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
|---|---|---|---|
| 2009/2010 | நிறுவனம் | 52% | 66% |
| | நிறுவனமல்லாத | 41% | 53% |
| 2010/2011 | நிறுவனம் | 56% | 68% |
| | நிறுவனமல்லாத | 42% | 59% |
| 2011/2012 | நிறுவனம் | 56% | 60% |
| | நிறுவனமல்லாத | 39% | 48% |
| 2012/2013 | நிறுவனம் | 56% | 70% |
| | நிறுவனமல்லாத | 41% | 54% |
| 2013/2014 | நிறுவனம் | 53% | 61% |

| | நிறுவனமல்லாத | 42% | 57% |
|---|---|---|---|

| அட்டவணை 08 – ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | பெசேவ | பொசேக | தேசவ | உபொசெவ | |
| 2012 | 89% | 80% | 79% | வரி மதிப்பீட்டாண்டு 2011/2012 | 52% |
| 2013 | 78% | 93% | 77% | வரி மதிப்பீட்டாண்டு 2012/2013 | 53% |
| 2014 | 49% | 71% | 84% | வரி மதிப்பீட்டாண்டு 2013/2014 | 55% |

## 2.9 வருமான வரி சேகரிப்பு

நிறுவன வருமான வரி, ஆளுக்குரிய வருமான வரி, பங்கிலாப வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி என்பவற்றிலிருந்தான வருமான சேகரிப்பானது 2014 இல் ரூபா 191,960 இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இது ஏறக்குறைய 3.57% வீத வீழ்ச்சியாகும். 2013 உடன் ஒப்பிடுகையில் இது ரூபா 199,070 மில்லியனாக இருந்துள்ளது. குறித்த ஆண்டிற்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மொத்த வருமானத்தின் 37.33% இற்கான மொத்த வருமான வரி சேகரிப்பானது 2013 இல் 40.42% ஆக இருந்துள்ளது. உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தி, மின் பிறப்பாக்கம் மற்றும் ஏற்றுமதிகள் போன்றவை உள்ளடங்கலாக வேறுபட்ட சேவைகளை ஊக்குவிப்பதற்காக கடந்த காலப்பகுதியில் ஊக்குவிக்கப்பட்ட வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள் மற்றும் சலுகை வரி வீதங்கள் என்பன வருமான வரியிலிருந்தான வருமான வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக அமையலாம்.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்

மொத்த வருமான வரி சேகரிப்புக்கு (ரூபா 191,960 மில்லியன்) ஒருங்கிணைந்த துறையிலான பங்களிப்பு ரூபா 92,028 மில்லியனாக இருந்துள்ளது அல்லது மொத்த வருமான வரி சேகரிப்பில் 48% ஆக அமைந்திருந்தது. ஒருங்கிணையாத துறையானது ரூபா 99,931 மில்லியனை அல்லது 52% இனைப் பங்களிப்புச் செய்துள்ளது.

அட்டவணை 09 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.

| அட்டவணை 09 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு – 2013 & 2014 | | | | |
|---|---|---|---|---|
| | 2014 | | 2013 | |
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| **நிறுவனம் *** | 92,028,323,420.00 | 48% | 94,053,497,550.00 | 47% |
| **நிறுவனமல்லாத **** | 99,931,727,250.00 | 52% | 105,016,533,154.00 | 53% |
| **மொத்தம்** | **191,960,050,670.00** | **100%** | **199,070,030,704.00** | **100%** |

* 2013 இல் ரூபா 9,767 மில்லியன் மற்றும் 2014 இல் ரூபா 10,365 மில்லியன் பங்கிலாப வரியினையும் உள்ளடக்குகின்றது.

** உழைக்கும் போது செலுத்தும் வரி முறைமையின் கீழ் (PAYE) வருமான வரி செலுத்துகின்ற ஒருங்கிணைந்த துறை மற்றும் ஊழியர்களினால் அளிக்கப்படும் வட்டி வருமானம், சேவைகளிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் நிறுத்திவைத்தல் வரி உள்ளடங்கலாக

**வரைபு 05**
**ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணையாத வருமான வரி சேகரிப்பு**
**2013 & 2014**



### 2.9.2 மூலத்தின் அடிப்படையில் வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 10 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) கா ட்டுகின்றது.

அட்டவணை 10 - வருமான வரி சேகரிப்பு - 2014

| மூலம் | சேகரிப்பு (ரூபா மில்.) | |
|---|---|---|
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 21,957.17 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 353.44 | **22,310.61** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 89,724.71 | |
| ஆண்டுக் கட்டணங்கள், வேத்துரிமைக் கட்டணங்கள் அல்லது முகாமைத்துவக் கட்டணங்களின் கொடுப்பனவுகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 69,627.10 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 10,384.56 | |
| **மொத்த சேகரிப்பு** | | **192,046.98** |
| கழி: மீளளிப்பு | | -86.93 |
| **தேறிய சேகரிப்பு** | | **191,960.05** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில், வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா 89,724 ஆகும்.

### 2.9.3 வருமான வரியுடன் தொடர்புடைய *பிரதான கொள்கை மாற்றங்கள்*

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு வரி விதிப்பு முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விலக்களிப்புக்கள்**

பின்வரும் நிறுவனங்களின் ஏதேனும் இலாபங்கள் அல்லது வருமானம் (பங்கிலாபம் மற்றும் வட்டி நீங்கலாக) வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

- 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை
- 1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவக சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம்
- 1986 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இலங்கை பௌதீகவியல் நிறுவக (கூட்டிணைக்கப்பட்ட) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பௌதீகவியல் நிறுவகம்

பின்வரும் இலாபங்களும் வருமானங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

அ) குறித்த வரி மதிப்பீட்டாண்டுக்காக ஊழியர் ஒருவரின் தொழில் வருமானத்திலிருந்து வரிக் கழிப்பனவு செய்யப்படுமாயின், ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடாத எவரேனும் ஊழியரின் இறுதி வரியாக வரி விதிக்கத்தக்க ஏதேனும் இலாபம் அல்லது வருமானத்தில் அல்லது ஏதேனும் தொழில் வருமானமல்லாத ஏதேனும் மதிப்பீட்டாண்டொன்றுக்கு ரூபா 48,000/- மொத்தத் தொகையினை விஞ்சாத இலாபங்கள் மற்றும் வருமானம்.

ஆ) இலாபங்கள் அல்லது வருமானத்தின் மீது நாட்டில் செலுத்தத்தக்கதல்லாத அல்லது இலங்கைக்கும் மற்றைய நாட்டுக்குமிடையில் வலுவிலில்லாத அத்தகைய இலாபத்தின் வரி விதிப்புக்கு நிவாரணத்தினை வழங்குகின்ற இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கின்ற உடன்படிக்கையெனில், ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் லிமிட்டெட் அல்லது மிஹின் லங்கா (தனியார்) லிமிட்டெட் இனால் அத்தகைய விமான சேவைகளின் விசேட தேவைப்பாடாக, ஏதேனும் கம்பனி மென்பொருளினை பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுப்பனவிலிருந்து இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கம்பனி, பங்குடமை அல்லது ஆட்களின் குழுமத்திற்கு எழுகின்ற அல்லது வந்து சேருகின்ற இலாபம் மற்றும் வருமானம்.

(இ) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 10(1) (ஒ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட முதலீடு தொடர்பில் கம்பனியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விலக்களிப்புப் பெற்ற

பங்கிலாபங்களில் விநியோகிக்கப்பட்ட பங்கிலாபங்கள் அத்தகைய பங்கிலாபங்கள் பெறப்பட்டு ஒரு மாத காலத்தினுள் அத்தகைய விநியோகம் மேற்கொள்ளப்படுமாயின்,

**சலுகை வரி வீதங்கள்**

i. தைத்த ஆடைகளின் ஏற்றுமதியாளர்களுக்கு குறித்த சில சேவைகளை வழங்குவதற்கான இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடைய தற்போதைய 12% சலுகை வரி வீதமானது, வெளிநாட்டு நாணய வடிவில் இலங்கையில் அத்தகைய சேவைகளின் வழங்குனருக்கு ஏற்றுமதியாளரினால் அல்லது வெளிநாட்டு முதல்வரினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்தகைய சேவைகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அத்தகைய சேவைகளின் ஏற்பாடு அல்லது அத்தகைய பொருட்கள் தயாரிப்புடன் தொடர்புடையதாக கருதப்படக் கூடிய,

- பொருட்கள் அல்லது சேவைகளின் ஏற்றுமதியாளர்கள் அல்லது,
- நேரடியாக வெளிநாட்டு முதல்வருக்கான

சேவைகளுக்கு அளிக்கப்படும் சேவைகளை உள்ளடக்கியதாக விரிவாக்கப்படும்.

ii. ஐநூறு மில்லியன் ரூபாய்களை விஞ்சாத வருடாந்த புரள்வுடன் கையேற்பதற்கு ஏற்புடைய வரி வீதம் 12% இற்கு மீளாய்வு செய்யப்பட்டது.

iii. உயர் தொழிலர்களுக்கான வரி வீதங்கள் பின்வருமாறு குறைக்கப்பட்டன.

| உயர் தொழிலிருந்தான வருமானம் | ஆகக் கூடிய வரி வீதம் |
|---|---|
| ரூபா 25 மில்லியனை விஞ்சாத | 12% |
| ரூபா 25 மில்லியனை விஞ்சுகின்ற ஆனால் ரூபா 35 மில்லியனை | 14% |
| ரூபா 35 மில்லியனை விஞ்சுகின்ற | 16% |

iv. உயர் தொழிலர்களின் ஊழிய வருமானத்தில் ஏற்புடைய ஆகக் கூடிய வருமான வரி வீதம் 16% இற்கு குறைக்கப்பட்டது.

v. 5 மில்லியன் ரூபாவுக்கு விஞ்சாத வரி விதிக்கத்தக்க வருமானத்துடன் கம்பனிகளுக்கு ஏற்புடையதான ஆகக் குறைந்த வரி வீதமானது நீக்கப்பட்டது.

vi. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 59ஈ பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏற்புடைய வரி வீதத்தின் அரைவாசியினைப் பிரயோகிப்பதற்காக பொதுமக்களுக்கு 20% இற்கும் குறையாத வழங்கலுடன் கம்பனியொன்றின் பங்குகளின் நிரலிடலுக்கான காலப்பகுதியானது, அக்கம்பனியானது 28% அல்லது அதற்கு மேல் நிறுவன வருமான வரியினைச் செலுத்துகின்ற கம்பனியாக இருக்கின்றமையினால் மேலும் மூன்று வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

**ஊழியத்தின் மூலமாக பெறப்படும் உழைப்பூதியத்திலிருந்தான கழிப்பனவு**

i. 10% வரி பிரயோகத்திற்காக ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் வழங்குனரின் கீழ் பொதுத் துறையில் தொழில் புரிகின்ற தனிநபர் ஒருவரினால் பெறப்படுகின்ற மாதாந்த பெறுகைகளின் எல்லையானது ரூபா 25,000 இலிருந்து ரூபா 50,000 இற்கு உயர்த்தப்பட்டது.

ii ஒன்றிற்கு மேற்பட்ட தொழில் வழங்குனர்களின் கீழ் தொழில் புரிகின்ற அல்லது பல்வேறுபட்ட இடங்களில் சேவையாற்றுகின்ற தனிநபர் ஒருவர், தொழில் வழங்குனரினால் அளிக்கப்படும் மோட்டார் வாகனமொன்றின் தனிப்பட்ட பயன்பாட்டிலிருந்து பெறுகின்ற ஏதேனும் நன்மை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களிலிருந்து கிடைக்கப் பெறும் ஏதேனும் பயன் என்பவற்றின் பின்னரான அத்தனிநபரின் மொத்த மிகை அல்லது அத்தகைய ஊழியரின் ஊழிய வருமானத்தின் பகுதி வடிவில் கிடைக்கப் பெறும் படியானது ரூபா ஐம்பதினாயிரத்திற்கு மேற்படுமிடத்து, அத்தகைய வருமானமானது வரி விதிப்புக்குள்ளாகும்.

**வரி விடுமுறை மற்றும் தகைமைவாய்ந்த கொடுப்பனவுகளின் பிரயோகம் மீதான கட்டுப்பாடு**

i. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழான விலக்களிப்பானது 2014.04.01 இற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

ii. பிரிவு 34 இன் உட்பிரிவு (2) இன் பந்தி (த) அல்லது பந்தி (ந) குறித்துரைக்கப்பட்ட தகைமை வாய்ந்த கொடுப்பனவுகளாக தற்போதைய கையேற்குகை ஒன்றின் விரிவாக்கலுக்கான முதலீட்டின் கழிப்பானது 2014 ஏப்ரல் 1 இற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

iii. வேறுபட்ட துறைகளுக்கு குறைவான வரி வீதங்களினை ஏற்புடையனவானதாக்கும் நோக்கில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள், ஆரம்பச் செலவுகள் போன்ற செலவுகளின் கழிப்பனவுடன் சேர்ந்ததான துரிதமாக்கப்பட்ட தேய்மான கொடுப்பனவுகள், நீடித்து நிலைத்திருக்கும் ஆகக் குறைந்த முதலீடு மற்றும் குறித்த வரி விலக்களிப்பு காலப்பகுதி என்பன மேலும் செம்மைப்படுத்தப்பட்டது. (பிரிவு 16இ, 16ஈ மற்றும் 17அ என்பன மேலும் திருத்தியமைக்கப்பட்டது)

**தொழில்சார் சேவைத் துறைகளுக்கான விசேட வரிச் சலுகைகள்**

**சர்வதேச தலைமையலுவலகங்களின் அல்லது பிராந்திய தலைமையலுவலகங்களின் மீள் அமைவிடம்**

சர்வதேச வலையமைப்பிலுள்ள நிறுவனங்களின் பிராந்திய தலைமை அலுவலகங்கள் அல்லது தலைமையகங்களினை இலங்கையில் மீள் அமைப்பதன் மூலம் தாபனத்தினை தரமுயர்த்துவதற்கு பின்வரும் வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

அ. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்கான வருமான வரி

ஆ. அத்தகைய தலைமையலுவலகங்கள் அல்லது பிராந்திய தலைமை அலுவலகங்களினை கூட்டிணைப்பதுடன் தொடர்புடைய விசேட செலவுகளின் கழிப்பனவு

இ. வெளிநாட்டு நாணய வடிவிலான பெறுகைகளின் மீதான பெசேவ மற்றும் தேகவ கொடுப்பனவுக்கான நிவாரணம்

**உயர் தொழிலர்களுக்கான வதிவிட மனைகளின் நிவாரணம்**

தனியாக அல்லது எனைய தனிநபர்களுடன் இணைந்து ஏதேனும் உயர் தொழிலில் எவரேனும் தனிநபர் தமது சொந்த வதிவிட நோக்கங்களுக்காக அத்தகைய வதிவிட அடுக்குமாடி தொகுதியொன்றினை நிருமாணிக்கும் நோக்கத்திற்காக வங்கி மற்றும் நிருமாண ஒப்பந்தக்காரர்களுடன் கூட்டமைப்பு ஒன்றினை ஏற்படுமிடத்து, அதற்குப் பின்வரும் வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன:

அ. வங்கி வழங்குகின்ற கடன் வசதியானது குறித்த நோக்கத்திற்காக அத்தகைய தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட அத்தகைய கடன்கள் மீதான வட்டியின் ஏற்புடைய வீதத்தின் அரைவாசியினை மட்டும் வரி அறவிடப்படுகின்றது.

ஆ. மூலதன மீள் கொடுப்பனவு மீது மாதமொன்றிற்கு ரூபா 50,000/- இனை விஞ்சாத தொகையினைக் கொண்ட தகைமை வாய்ந்த கொடுப்பனவானது குறித்த கொடுப்பனவு மீது அத்தகைய தனிநபர்களினால் முழுமையாக கழிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

இ. ஆதன மாற்றீட்டு உறுதி மீது ஏற்புடைய முத்திரைத் தீர்வையானது 25% இனால் குறைக்கப்பட்டது.

**சர்வதேச பண்டப் பெயர்களுடன் தாபிக்கப்பட்ட சர்வதேச புலமைச் சொத்துக்களின் கொள்ளலினை மேம்படுத்துவதற்கான வரிச் சலுகைகள்**

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு புலமைச் சொத்தினைக் கொள்வனவு செய்து வேத்துரிமைக் கட்டணம் மூலமாக வெளிநாட்டு நாணய வடிவில் வருமானத்தினை உழைக்கின்ற ஏதேனுமொரு தாபனத்திற்கு பின்வரும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

அ. மொத்தக் கொள்ளல் செலவானது வருமான வரி நோக்கத்திற்காக கழிப்பனவாக அனுமதியளிக்கப்பட்டது.

ஆ. வெளிநாட்டு நாணய வடிவில் உழைக்கப்பட்ட வருமானம் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்காக விலக்களிக்கப்பட்டது.

**உயர் தொழிலர்களினால் நிறுவன ஆளுமையினை ஏற்படுத்துவதற்கான வரிச் சலுகைகள்**

சர்வதேச சேவைகளை அளிப்பதற்கான நிறுவன ஆளுமையினை தாபிக்கின்ற உயர் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு பின்வரும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

அ. வரி விதிப்பனவுக்குப் பொறுப்பாகக் கூடிய சேவைகள் மீது 5 வருட காலப்பகுதி ஒன்றுக்கான ஏற்புடைய நிறுவன வரியின் ½

ஆ. ஏதேனும் அடுத்துவரும் 3 வருட காலப்பகுதியினுள் இலங்கைக்கு வருடமொன்றிற்கு 100,000 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகை அனுப்பி வைக்கப்படுமாயின், மொத்த வரிகள் மற்றும் வாகன இறக்குமதி மீதான தீர்வைகள் ஆகியவற்றின் மீது 10% வரிச் சலுகை அனுமதிக்கப்பட்டது.

**கப்பல் கைத்தொழிலில் திறன் விருத்திக்கான வரிச் சலுகை**

கப்பல் இயக்குனர் ஒருவரினால் அல்லது வெளிநாட்டு கப்பலொன்றின் எவரேனும் முகவரினால் செலுத்தத்தக்க வருமான வரியின் 10% கழிப்பனவானது பயிலுனர்களுக்கு கப்பல் துறைக் கைத்தொழிலின் திறன் விருத்தி ஏற்பாட்டினைக் கவனத்தில் கொண்டு அனுமதியளிக்கப்பட்டது. கழிப்பனவுக்கான வகையீடானது பயிற்சி அளிக்கப்பட்ட தனிநபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

**நிதிக் கம்பனியாகவிருக்கின்ற பிரதான கம்பனியினால் இணைப்பு அல்லது கொள்ளலின் மூலமான நிதி நிறுவனங்களின் கொள்ளல் செலவுகளின் கழிப்பனவு**

பிரதான கம்பனியினால் நிதிக் கம்பனிகளின் கொள்ளல் அல்லது இணைப்புச் செலவானது 3 வரி மதிப்பீட்டாண்டுகளினுள் கழிப்பனவு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

## 2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது ரூபா 237,915 மில்லியனாக அமைந்திருந்ததுடன் குறித்த ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 290,000 உடன் ஒப்பிடுகையில் ரூபா 52,085 மில்லியன் வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,229 மில்லியன் அல்லது 9.29% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. உள்நாட்டு வழங்கல்களின் மீது சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியின் பாகமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டியுள்ள அதேவேளையில், குறித்த ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரியானது சிறியளவிலான வீழ்ச்சியினையும் காட்டியுள்ளது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு பெறுமதி சேர் வரியானது ரூபா 135,635 மில்லியனாக இருந்த அதேவேளையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 121,097 மில்லியனாக காணப்பட்டதுடன் இது ரூபா 14,538 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி சேர் வரியானது ரூபா 102,280 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 2013 இல் ரூபா 96,590 மில்லியனாகவும் இருந்துள்ளது.

அட்டவணை II ஆனது 06 ஆம் வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11 – பெறுமதி சேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2013 | | 2014 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்புகள் | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **உற்பத்தித் துறை** | | 43,718.74 | | 46,174.34 | 732.64 | | 45,441.70 |
| **உற்பத்தியல்லா துறை** | | | | | | | |
| -சேவைகள் | 56,149.83 | | 66,131.91 | | 379.24 | 65,752.67 | |
| -நிதியியற் சேவைகள் | 21,203.51 | | 24,436.86 | | | 24,436.89 | |
| -விருப்பு பெசேவ | 24.76 | 77,378.10 | 3.49 | 90,572.26 | | 3.49 | 90,193.05 |
| **இறக்குமதிகள்** | | 96,590.08 | | 102,281.48 | 0.80 | | 102,280.68 |
| **மொத்தம்** | | **217,686.92** | | **239,028.08** | **1,112.68** | | **237,915.43** |




அட்டவணை 12 ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெறுமதி சேர் வரி சேகரிப்பு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றின் துறை ரீதியான வகையீட்டினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 12 – மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு**

| துறை | 2013 | | 2014 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2013 | 2014 |
| **உற்பத்தித் துறை** | 43,718,740,385 | 20.08% | 45,441,698,904 | 19.10% | 0.50% | 0.46% |
| **உற்பத்தியல்லா துறை** | 77,378,096,221 | 35.55% | 90,193,048,803 | 37.91% | 0.89% | 0.92% |
| **இறக்குமதிகள் மீதான** | 96,590,086,435 | 44.37% | 102,280,685,200 | 42.99% | 1.11% | 1.05% |
| **மொத்தம்** | **217,686,923,041** | **100.00%** | **237,915,432,907** | **100.00%** | **2.50%** | **2.43%** |

## 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 13 ஆனது வங்கியியல், காப்புறுதி, ஹோட்டல் மற்றும் உணவகம், நிர்மாணம், மின்சாரம் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு பெறுமதி சேர் வரியினையும் மொத்த பெறுமதி சேர் வரி வருமானத்துக்கு அவை வழங்கிய பங்களிப்பினையும் காட்டுகின்றது.

| அட்டவணை 13 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| துறை | 2012 (ரூபா மில்.) | 2013 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2014 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
| வங்கித்தொழில் | 14,380 | 15,921 | 10.72% | 18,822 | 18.22% |
| காப்புறுதி | 4,456 | 4,882 | 9.56% | 4,910 | 0.57% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 5,396 | 5,672 | 5.11% | 6,507 | 14.72% |
| நிர்மாணம் | 5,871 | 5,293 | -9.85% | 6,943 | 31.17% |
| மின்சாரம் மற்றும் வாயு | 570 | 502 | -11.93% | 560 | 11.55% |
| இறக்குமதிகள் | 6,949 | 9,113 | 31.14% | 10,389 | 14.00% |
| நிதியளிப்பு | 10,576 | 11,860 | 12.14% | 13,982 | 17.89% |
| தொடர்பாடல் | 211 | 256 | 21.33% | 394 | 53.91% |
| பெற்றோலிய உற்பத்தி | 269 | 344 | 27.88% | 1,509 | 338.66% |
| குடிவகையும் மதுபானமும் | 9,043 | 9,747 | 7.79% | 9,930 | 1.88% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 7,633 | 7,916 | 3.71% | 9,866 | 24.63% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 7,105 | 9,517 | 33.95% | 10,280 | 8.02% |
| ஏனையவை | 32,723 | 39,516 | 20.76% | 42,408 | 7.32% |
| **மொத்தம்** | **105,187** | **120,538** | **14.59%** | **136,500** | **13.24%** |

## 2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கு பின்வரும் விலக்களிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**விலக்களிப்புக்கள்**

i. தொலைத்தொடர்புக் கைத்தொழிலுக்கான ஏதேனும் இயந்திரத்திற்கு அல்லது உயர் தொழில்நுட்ப உபகரணத்தின் இறக்குமதி அல்லது உள்நாட்டு கொள்வனவு தொடர்பில் தொலைத்தொடர்பு கைத்தொழிலுக்கு கிடைக்கக் கூடிய தற்போதைய விலக்களிப்பானது இதுவரையில் கைத்தொழிலின் உள்ளக கட்டமைப்பு அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய செப்புக் கம்பிகள் பெசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இன் பந்தி (அ) இன் விடயம் (XX) இல் விதித்துரைக்கப்பட்டவாறான அதே நிபந்தனைகளுக்குட்படுகின்ற செப்புக் கம்பிகளின் இறக்குமதி அல்லது உள்நாட்டு கொள்ளளவினை உள்ளடக்கியதாக விரிவாக்கப்பட்டுள்ளது. இறக்குமதிக்கான விலக்களிப்பானது தேவையான தரம் மற்றும் தொகையில் இலங்கையில் அத்தகைய கம்பிகள் கிடைக்கப் பெறாவிடின் மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருந்தது.

ii. உரிய அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு பொதுமக்களுக்கு அத்தகைய சேவைகளை வழங்கும் நோக்குடன் ஏதேனும் உள்ளூர் அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் கழிவு அகற்றல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கழிவு அகற்றும் பௌசர்கள், வீதி டிராக்டர்களுக்கான அரை இழுவைப் பெட்டிகள், ஏதேனும் இயந்திரம் அல்லது உபகரணம் என்பவற்றின் இறக்குமதி மீது ஏற்புடைய தற்போதைய வரி விலக்களிப்பானது அதே நிபந்தனைகளுக்குட்பட்டு, அவ்வாறான உள்நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து அத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அத்தகைய பொருட்களின் மீதான விலக்களிப்பினையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது.

iii. பின்வரும் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

அ. எச்எஸ் குறியீட்டு இல. 62.15.10, 62.15.20, 62.15.90

ஆ. எச்எஸ் குறியீட்டு இல.96.08.30 இன் கீழான வடிவமைப்பு பேனாக்கள்

இ. எச்எஸ் குறியீட்டு இல.0511.91.90, 9507.10, 9507.20, 9507.30 மற்றும் 9507.90 குளிரூட்டப்பட்ட தூண்டில் இரை, மீன் கொக்கி /கம்பி, மீன்பிடி கலன்

ஈ. எச்எஸ் குறியீட்டு இல. 8407.21, 8407.29 இன் கீழான கடல் பிரயாண மோட்டார் இயந்திரங்கள்

**விலக்களிப்பு மட்டுப்படுத்தல்கள்**

i. கலண்டர் வருடமொன்றிலுள்ள ஏதேனும் அடுத்துவரும் மூன்று மாத காலப்பகுதிக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தவிர்ந்த ரூபா 250 மில்லியனை விஞ்சுகின்ற மொத்த உள்நாட்டு வழங்கல் பெறுமதியினைக் கொண்டிருக்கின்ற எவரேனும் இறக்குமதியாளரினைப் பொறுத்தவரையில், விசேட பண்ட வரிக்குட்படுகின்ற பொருட்கள்

மீதான பெறுமதி சேர் வரியிலிருந்தான விலக்களிப்பு பிரயோகமானது சுங்க நுழைவாயிலில் மட்டும் வைத்து செலுத்தத்தக்க பெறுமதி சேர் வரிக்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஏதேனும் கலண்டர் வருடமொன்றின் அடுத்துவரும் மூன்று மாத காலப்பகுதிக்கு அத்தகைய பொருட்களின் இறக்குமதியாளரின் மொத்த வழங்கல் பெறுமதியானது ரூபா 250 மில்லியனை விஞ்சுமாயின், முதலாம் அட்டவணையின் பகுதி II இன் பந்தி (ஆ) இன் விடயம் (xiii) இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பொருட்களின் உள்நாட்டு வழங்கலானது பெறுமதி சேர் வரிக்குட்படும்

ii. கீழே நிரல்படுத்தப்பட்டுள்ள அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் வழங்கல் அல்லது இறக்குமதி மீதான விலக்களிப்பு நீக்கப்பட்டது.

அ) நெல், அரிசி, கோதுமை, ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், கடுகு, மிளகு, உலர்த்திய தேங்காய், இறப்பர், இறப்பர் பால், தேங்காய், பச்சை இலை உள்ளடங்கலான தேயிலை, அரிசி மா, பாண், முட்டை, திரவப்பால்

ஆ) எச்எஸ் குறியீட்டு இல. 8701.10.10, 8701.10.90, 8701.20.10, 8701.90.10, 8701.90.20 இன் கீழான அரை இழுவைப் பெட்டிகளுக்கான விவசாய உழவு இயந்திரங்கள் அல்லது வீதி டிராக்கடர்கள்

இ) எச்எஸ் குறியீட்டு இல. 8438.80.40, 8429.10 இன் கீழ் தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழிலுக்கான இயந்திரங்களும் உபகரணங்களும்

ஈ) தொழிற்சாலை உரிமையாளரினால் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான இயந்திரங்கள்

உ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 24இ பிரிவின் கீழான வரி விடுமுறைக்காக தகைமைவாய்ந்த பொறுப்பேற்குகைகளின் மூலமான பொறி மற்றும் இயந்திரம்

ஊ) எச்எஸ் குறியீட்டு இல. 3003.90.11, 3003.90.12, 3003.90.13, 3003.90.15, 3003.90.19, 3004.90.11, 3004.90.12, 3004.90.13, 3004.90.15 அல்லது 3004.90.19 இன் கீழ் வருகின்ற மருந்தாக்கல் தயாரிப்புக்கள்.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் மீதான பெசேவ**

i. பெசேவ அறவிடத்தக்கதான மொத்த அல்லது சில்லறை வியாபாரமொன்றினை கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது பங்குடமையின் காலாண்டு வழங்கலின் பெறுமதியின் நடைமுறை குறுமட்டமானது ரூபா 500 மில்லியனிலிருந்து ரூபா 250 மில்லியனுக்கு குறைவடைந்தது. மொத்த வியாபாரம் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற கம்பனிகள் குழுமத்தின் துணைக் கம்பனியோ அல்லது அல்லது இணைக் கம்பனியோ காலாண்டுக்கான அத்தகைய வியாபாரத்தில் ஈடுபடுகின்ற குழுமத்திலுள்ள ஒவ்வொரு கம்பனியின் வழங்கல்களின் மொத்தப் பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் காலாண்டுக்குப் பொறுப்பாகும் குறுமட்டத்தினை அடைந்துள்ளது.

ii. முதலாம் அட்டவணையின் பகுதி II இல் விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் வழங்கலுக்கு ஏற்புடைய விலக்களிப்பானது, பெசேவ இலிருந்து விலக்களிப்புப் பெற்ற பொருட்கள் மற்றும் பெசேவ இற்குப் பொறுப்பாகக் கூடிய மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரத்தினைப் பொறுத்தவரையில், மொத்த வழங்கல்கள் ஆகக் கூடுதலாக 25% இற்குட்பட்டிருந்தது. இந்த சீராக்கலின் காரணமாக அத்தகைய பொறுப்பாகக் கூடிய வழங்கல்கள் மீது கிடைக்கப் பெறத்தக்க உள்ளீட்டு வரி செலவானது பிரிவு 22 இல் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதிக்கப்பட்டது.

**சர்வதேசப் போக்குவரத்து வரைவிலக்கணத்தினை விரிவாக்குதல்**

நடைமுறை வரைவிலக்கணமானது, இலங்கையினுள் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கிடையில் பொருட்கள் அல்லது பயணிகள் போக்குவரத்துடன் நேரடியாக தொடர்புபடுகின்ற சேவைகளை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது.

**பெசேவ மீளளிப்புக்கான பங்களிப்பு**

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் இறக்குமதி மீது சேகரிக்கப்படுகின்ற பெசேவ இல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் பெசேவ மீள் நிதியிடல் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்படுகின்ற வீதாசாரமானது இபெசேவ திட்ட அமுலாக்கத்தின் காரணமாக மீளளிப்புக் கோரிக்கைகள் குறைவடைந்தமையினைக் கருத்தில் கொண்டு 10% இலிருந்து 6% இற்குக் குறைக்கப்பட்டது.

## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான தேகவ சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 65,357 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. மொத்த தேகவ வருமானத்தில் ரூபா 18,460 மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. 2013.12.31 இலுள்ளவாறான தேகவ இற்காக பதிவு செய்யப்பட்டுள்ள வரி செலுத்துனர்களின் மொத்த எண்ணிக்கை 20,480 ஆக இருந்துள்ளது. குறித்த ஆண்டில் காலாண்டுக்கு ரூபா 3 மில்லியன் வரையில் புரள்வின் எல்லைப் பெறுமதியானது அதிகரித்துள்ளமையினால், அப்புரள்வு எல்லைக்கு குறைவாகவுள்ள ஆட்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 14 – தே.க.வரி சேகரிப்புப் பகுப்பாய்வு – 2014

| துறை | தேறிய சேகரிப்பு (ரூபா) | |
|---|---|---|
| | 2013 | 2014 |
| உற்பத்தி | 16,418,159,594 | 15,354,329,424 |
| சேவைகள் | 20,535,728,568 | 26,238,065,267 |
| இறக்குமதிகள் | 22,443,443,876 | 23,764,587,831 |
| **மொத்தம்** | **59,397,332,038** | **65,356,982,522** |

| அட்டவணை 15 – தேசக் கட்டுமான வரி சேகரிப்பும் மதிப்பீடும் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2014 | 45,600,000,000 | 44,583,121,715 | 98% |
| 2013 | 48,782,000,000 | 40,936,670,691 | 84% |




### 2.11.1 தேசக் கட்டுமான வரி தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள்

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தேசக் கட்டுமான வரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**விலக்களிப்புக்கள்**

i. வெளிநாட்டு நாணய வடிவிலான கொடுப்பனவுக்காக சுங்கத் தீர்வையற்ற கடைகளில் பொருட்களின் சில்லறை வியாபாரம்.

ii. தயாரிப்பாளரினால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்யின் விற்பனைக்கு மூன்று வருட காலப்பகுதி

iii. எல்பி எரிவாயுவின் விநியோகம்

iv. வெளிநாட்டு நாணய வடிவிலான கொடுப்பனவுகளுக்காக ஏதேனும் விமான நிலையத்தில் அளிக்கப்படுகின்ற சேவைகள்

**விலக்களிப்புக்கான கட்டுப்பாடுகள்**

i. விசேட பண்ட வரிக்குட்படுகின்ற பொருட்கள் மீதான தேசக் கட்டுமான வரியிலிருந்தான விலக்களிப்பின் பிரயோகமானது சுங்கத்தில் வைத்து மட்டும் செலுத்தத்தக்க தேசக்கட்டுமான வரிக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

ii. தேசக் கட்டுமான வரியிலிருந்தான நிதிச் சேவைகளின் விலக்களிப்பானது முதலீட்டு நிதியக் கணக்கில் நிதியிடப்படுகின்ற வைப்புக்களின் தேவைப்பாடுகளினை மீளப் பெறும் நோக்குடன் முடிவுறுத்தப்பட்டது.

iii. உழவு இயந்திரங்கள் விற்பனை மீதான புரள்வு தொடர்பான விலக்களிப்பானது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உழவு இயந்திரங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. எச்எஸ் குறியீட்டு இல. 8701.10.10, 8701.10.90, 8701.20.10, 8701.90.10, 8701.90.20 இன் கீழ் வருகின்ற உழவு இயந்திரங்களின் இறக்குமதியானது தேசக் கட்டுமான வரிக்கு பொறுப்பாகக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டது.

iv. எச்எஸ் குறியீட்டு இல.3003.90.11, 3003.90.12, 3003.90.13, 3003.9015, 3003.90.19, 3004.90.11, 3004.90.12, 3004.90.13, 3004.90.15 அல்லது 3004.90.19 இன் கீழ் வருகின்ற மருந்தாக்கல் தயாரிப்புக்கள் இறக்குமதி.

### 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொ.சே.கட்டணத்தின் திரட்டிய தொகையாக ரூபா 6,154 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன் மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 1.2% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 73.27% ஆகும்.

| அட்டவணை 16 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2014 | 8,400,000,000 | 6,154,508,746 | 73% |
| 2013 | 12,763,000,000 | 6,595,600,863 | 52% |




### 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 22,297 மில்லியனாக இருந்துள்ளதுடன் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 18,558 மில்லியனாக இருந்துள்ளது.

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பின் கீழ் வருமான வரி செலுத்துகின்ற ஊழியர்களின் எண்ணிக்கையானது 354,758 இனைப் பதிவு செய்துள்ளதுடன் (குறித்த சில தொழில் வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணப்படுத்தப்படாத வெளிப்படுத்தல்களிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை நீங்கலாக) உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வழங்குனர்களின் எண்ணிக்கையானது 12,104.

| அட்டவணை 17 - பகுப்பாய்வு வரியின் கீழ் உ.பொ.செ. வரி மற்றும் வருமான மட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வருமான எல்லை ரூபா | | மொத்த உழைப்பூதியங்களின் கூட்டுத்தொகை ரூபா | ஊழியர்களின் எண்ணிக்கை | உ.பொ.செ.வரியின் கீழான வரி ரூபா |
| கீழ் 600,000 | கழிக்கப்படாத வரி | 124,127,156,637 | 616,982 | - |
| | கழிக்கப்பட்ட வரி | 16,485,271,005 | 46,083 | 158,390,341 |
| 600,001-1,100,000 | | 82,025,547,639 | 100,178 | 1,214,225,160 |
| 1,100,001-1,600,000 | | 49,257,520,928 | 36,782 | 1,487,429,085 |
| 1,600,001-2,100,000 | | 22,003,982,290 | 12,263 | 1,133,809,994 |
| 2,100,001-2,600,000 | | 11,969,417,045 | 5,196 | 847,263,825 |
| 2,600,001-3,600,000 | | 13,767,274,017 | 4,577 | 1,406,886,770 |
| Above 3,600,000 | | 43,958,632,004 | 6,284 | 7,887,786,569 |
| | | 8,324,313,513 | 97,617 | 935,100,049 |
| **Total** | | **371,919,115,078** | **925,962** | **15,070,891,793** |

*இந்த தகவல் 2013/2014 வரி மதிப்பாண்டின் போது தொழில் தருநர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட விபரத்திரட்டுக்களினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டதாகும்.*

## 2.14 நிறுத்தி வைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)

அரசாங்க பிணை முறிகள் (2013 இல் ரூபா 62,704,548,497/-) மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தான மீதி மீது ரூபா 55,880,945,735/- தொகையினைக் கொண்டுள்ள வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரியானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 69,402,270,951/- தொகையுடைய வருமானத்தினை பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டு சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த வருட வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வருமானமானது ரூபா 8,277 மில்லியனினால் அதிகரித்துள்ளது.

## 2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 815,175,141/- ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 684,824,859/- இனால் வீழ்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது.

அட்டவணை 18 ஆனது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

வரைபு 09
பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு
2014




| அட்டவணை 18 – பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2014 | 1,500,000,000 | 815,175,141 | 54% |
| 2013 | 850,000,000 | 591,870,451 | 70% |

## 2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு

2014 இல் நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பிலிருந்தான வருமானமானது ரூபா 841,828,584/- ஆகும். இந்த அறவீட்டுக்காக மொத்த பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை 304 ஆகும்.

அட்டவணை 19 ஆனது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் நிருமாண கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

| அட்டவணை 19 – நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பும் மதிப்பீடுகளும் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2014 | 1,000,000,000 | 841,828,584 | 84% |
| 2013 | 1,250,000,000 | 750,907,497 | 60% |

## 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரை தீர்வையிலிருந்து ரூபா 7,918 மில்லியன் வருமானமாக ஈட்டப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளின்படி (முத்திரை தீர்வை மாற்றல்) முத்திரை தீர்வையின் மொத்த சேகரிப்பும் உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது வரி அடிப்படையிலான விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியுள்ளதுடன் அதற்கிணங்க, 2014 ஆம் ஆண்டில் 75 இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. முத்திரை தீர்வையின் முறையாக பதிவு செய்யப்பட்டு ஒன்று சேர்ந்த முகவர்களின் எண்ணிக்கையானது 8,243 ஆக அமைந்திருந்ததுடன் (2014.09.30 இலுள்ளவாறு) இவர்களில் 8,165 பேர் 100% இணக்கப்பாடுகளுடன் அட்டவணைகளை சமர்ப்பித்துள்ளார்கள்.

**2.18 காணி மீதான மாற்றல் வரி**

2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் காணி வரியிலிருந்தான ஆண்டுக்கான சேகரிப்பானது ரூபா 579 மில்லியனைக் கொண்டிருந்ததுடன் ரூபா 96.58% மில்லியனினால் விஞ்சியுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**2.19 2010 இலிருந்து 2014 வரைக்கும் உள்நாட்டு இறைவரி சேகரிப்பு**

அட்டவணை 20 இல் தரப்பட்டுள்ள இலக்கங்கள் 2010 இலிருந்து 2014 வரையில் திணைக்களத்தின் வருமான சேகரிப்பின் வரி ரீதியான வகைப்படுத்தலினை பிரதிபலிக்கின்றது. இவற்றிற்கான சாத்தியமான காரணங்களுடன் உரிய வரிகளிலிருந்தான வருமானத்தின் அதிகரிப்புக்களும் வீழ்ச்சிகளும் இந்த அத்தியாயத்தின் முன்னைய பந்திகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட்டன.

**அட்டவணை 20 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2009 - 2013 – வரி அடிப்படை பகுப்பாய்வு**

| வரி வகை | 2010 | | 2011 | | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூபா மில்.) | % | சேகரிப்பு (ரூபா மில்.) | % | சேகரிப்பு (ரூபா மில்.) | % | சேகரிப்பு (ரூபா மில்.) | % | சேகரிப்பு (ரூபா மில்.) | % |
| வருமான வரி | 117,575 | 27.83 | 135,974 | 30.64 | 157,729 | 35.57 | 199,070 | 40.42 | 191,960 | 37.33 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 18,048 | 4.27 | 21,335 | 4.81 | 14,864 | 3.35 | 6,596 | 1.34 | 6,155 | 1.20 |
| பெறுமதிசேர் வரி | 219,563 | 51.97 | 215,420 | 48.54 | 204,656 | 46.15 | 217,687 | 44.20 | 237,915 | 46.27 |
| பற்று வரி | 10,843 | 2.57 | 4,232 | 0.95 | - | - | - | - | - | - |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 295 | 0.07 | 286 | 0.06 | 289 | 0.07 | 592 | 0.12 | 815 | 0.16 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 2273 | 0.54 | 3,264 | 0.74 | 1,285 | 0.29 | 1,197 | 0.24 | 2,048 | 0.40 |
| புரள்வு வரி | 388 | 0.09 | 131 | 0.03 | 138 | 0.03 | 218 | 0.04 | 472 | 0.09 |
| முத்திரைத் தீர்வை | 4,440 | 1.05 | 7,217 | 1.63 | 6,535 | 1.47 | 6,884 | 1.40 | 7,918 | 1.54 |
| பொருட்கள் சேவைகள் வரி | 39 | 0.01 | 25 | 0.01 | 12 | - | 16 | - | 3 | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 23 | 0.01 | 15 | - | 4 | - | 2 | - | 14 | - |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 830 | 0.20 | 1,106 | 0.25 | 710 | 0.16 | 751 | 0.15 | 842 | 0.16 |
| தேகவ | 46,022 | 10.89 | 53,501 | 12.05 | 57,106 | 12.88 | 59,397 | 12.06 | 65,354 | 12.71 |
| காணி வரி | - | - | - | - | - | - | 97 | 0.02 | 579 | 0.11 |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 2,173 | 0.51 | 1,324 | 0.30 | 127 | 0.03 | 32 | 0.01 | 85 | 0.02 |
| **மொத்த சேகரிப்பு** | **422,512** | **100.00** | **443,830** | **100.00** | **443,455** | **100.00** | **492,539** | **100.0** | **514,160** | **100.00** |

**வரைபு 10**

**உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2010 - 2014 – வரி அடிப்படை பகுப்பாய்வு**



# அத்தியாயம் 3

# செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

குறித்த ஆண்டில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 3,088 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது முன்னைய ஆண்டுத் தொகையான ரூபா 1,876 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 102% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்தில் 64.85% அல்லது ரூபா 2,002 மில்லியனானது நடைமுறைச் செலவினத்திற்காக செலவிடப்பட்டது. வேதனாதிகள் மீதான செலவினமானது 11.08% இனால் அதிகரித்துள்ளதுடன், இது 2013 இல் ரூபா 1,272 மில்லியனாக இருந்துள்ளது. மொத்த செலவினத்தின் 45.78% இனைக் கொண்டிருந்த இத்தகைய மிகப் பெரிய தனியொரு செலவினமானது, மீண்டுவரும் செலவினத்தின் 70.60% இனைக் கொண்டிருந்தது.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டு காலப்பகுதியில், மூலதன செலவினமானது 463.57% அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதுடன் அது ரூபா 1,086 மில்லியனை அடையப் பெற்றுள்ளது. 2013 இல் அது ரூபா 193 மில்லியனாக இருந்துள்ளது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 35.15% இனைப் பிரதிபலிக்கின்றது..

2013 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் முன்மொழியப்பட்டவாறு திணைக்களமானது, திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அமுலாக்கலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளினை எடுத்துள்ளதுடன் இக்கருத்திட்டத்திற்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 806,802 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.1 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு

**அட்டவணை 21:- மொத்த செலவினம் – 2012, 2013 மற்றும் 2014**

| விபரம் | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபா.'000) | % | (ரூபா.'000) | | (ரூபா.'000) | % |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| பிரயாணச் செலவுகள் | 1,209,700 | 75.40% | 1,272,722 | 67.85% | 1,413,734 | 45.78% |
| பிரயாணச் செலவுகள் | 24,231 | 1.51% | 19,124 | 1.02% | 17,722 | 0.57% |
| வழங்கல்கள் | 61,851 | 3.86% | 67,269 | 3.59% | 103,684 | 3.36% |
| பராமரிப்பு | 33,851 | 2.11% | 30,999 | 1.65% | 63,671 | 2.06% |
| ஒப்பந்த சேவைகள் | 210,813 | 13.14% | 265,284 | 14.14% | 372,162 | 12.05% |
| இடமாற்றல்கள் | 21,761 | 1.36% | 27,871 | 1.49% | 31,438 | 1.02% |
| ஏனையவை | 60 | 0.00% | | | | |
| **உப மொத்தம்** | **1,562,267** | **97.38%** | **1,683,269** | **89.73%** | **2,002,411** | **64.85%** |
| **மூலதனச் செலவினம்** | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 19,893 | 1.24% | 131,414 | 7.01% | 101,614 | 3.29% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 13,875 | 0.86% | 40,243 | 2.15% | 49,343 | 1.60% |
| திறன் கட்டியெழுப்புதல் | 8,293 | 0.52% | 20,963 | 1.12% | 127,793 | 4.14% |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | | | | | 806,802 | 26.13% |
| **உப மொத்தம்** | **42,061** | **2.62%** | **192,620** | **10.27%** | **1,085,552** | **35.15%** |
| **மொத்தம்** | **1,604,328** | **100%** | **1,875,889** | **100%** | **3,087,963** | **100.00%** |

## 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

வரைபு 11
மொத்த செலவினம் – 2012, 2013 மற்றும் 2014




வரைபு 12
மீண்டுவரும் செலவினத்தின் பகுப்பாய்வு 2014



2014 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 3,087,962,992/- ஆக இருந்துள்ளதுடன் சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 514,160,713,222/- ஆக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது, (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 166:1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 60 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெசேவ மற்றும் தேகவ என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 79 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 38 சதம் மற்றும் 50 சதமாக இருந்துள்ளது).

அட்டவணை 22 ஆனது 2012 இலிருந்து 2014 வரையிலான காலப்பகுதிக்குரிய வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றின் வகையீட்டினை வழங்குகின்றது.

அட்டவணை 22-வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு(ரூபா.மில்)

| விபரணம் | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 157,728.90 | 199,070.03 | 191,960.05 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 14,864.24 | 6,595.60 | 6,154.51 |
| பெறுமதிசேர் வரி | 204,656.03 | 217,686.92 | 237,915.43 |
| தேசக் கட்டுமான வரி | 57,105.79 | 59,397.33 | 65,353.98 |
| பற்று வரி | -0.48 | -0.08 | - |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 289.18 | 591.87 | 815.18 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,285.74 | 1,197.41 | 2,048.05 |
| புரள்வு வரி | 138.26 | 218.08 | 472.18 |
| முத்திரைத் தீர்வை | 6,535.31 | 6,884.39 | 7,918.14 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 11.99 | 15.97 | 3.46 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 3.93 | 2.15 | 13.77 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 709.65 | 750.91 | 841.83 |
| காணி வரி | | 96.74 | 579.47 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | 127.22 | 32.11 | 84.66 |
| **மொத்த சேகரிப்பு** | **443,455.76** | **492,539.43** | **514,160.71** |
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,209.70 | 1,272.72 | 1,413.73 |
| பிரயாணச் செலவுகள் | 24.23 | 19.12 | 17.72 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 61.85 | 67.27 | 103.68 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 33.85 | 31 | 63.67 |
| சேவைகள் | 210.81 | 265.28 | 372.16 |
| இடமாற்றல்கள் | 21.76 | 27.87 | 31.44 |
| ஏனையவை | 0.06 | | |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 19.89 | 131.41 | 101.61 |
| கொள்ளல்கள் | 13.88 | 40.24 | 49.34 |
| திறன் கட்டியெழுப்புதல் | 8.29 | 20.96 | 127.79 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | - | - | 806.80 |
| **மொத்த செலவினம்** | **1,604.32** | **1,875.89** | **3,087.94** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.36** | **0.38** | **0.6** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.5** | **0.5** | **0.79** |

### 3.3 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெசேவ தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் கட்டுநிதி காசுக் கணக்கினை செவ்வை பார்த்தல் என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

# அத்தியாயம் 4

# தவறவிடப்பட்ட வரிகள்

## 4.1 தவறவிடப்பட்ட வரிகள்

அட்டவணை 23 ஆனது 2014.12.31 இலுள்ளவாறான தவறவிடப்பட்ட வரி தொகைகள், தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

அட்டவணை 23 - 2014.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் (ரூபா) | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத்தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 56,899,485,469 | 37,253,768,193 | 48,386,379,832 | 33,389,149,188 | 8,513,105,637 | 3,864,619,005 |
| வருமான வரி மீதான மிகைக் கட்டணம் | 406,775,534 | 269,440,138 | 404,387,151 | 268,245,948 | 2,388,383 | 1,194,190 |
| வருமான வரி (வட்டி மீதான பிடித்து வைத்தல் வரி வட்டி) | 1,390,837,523 | 635,829,057 | 1,356,563,354 | 592,897,671 | 34,274,169 | 42,931,386 |
| பெறுமதிசேர் வரி | 44,497,939,944 | 29,802,383,798 | 39,717,299,223 | 25,770,072,800 | 4,780,640,721 | 4,032,310,998 |
| பெறுமதிசேர் வரி (நிதிச் சேவைகள்) | 8,593,768,538 | 4,842,592,562 | 8,550,240,806 | 4,830,389,132 | 43,527,732 | 12,203,430 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 7,117,628,614 | 3,141,589,723 | 4,335,790,517 | 2,210,143,380 | 2,781,838,097 | 931,446,343 |
| தேசக் கட்டுமான வரி | 2,727,620,407 | 1,920,389,170 | 1,614,856,989 | 1,217,591,210 | 1,112,763,418 | 702,797,960 |
| முத்திரைத் தீர்வை | 9,732,724 | 3,773,302 | - | - | 9,732,724 | 3,773,302 |
| பற்று வரி | 2,215,581,368 | - | 2,215,581,368 | - | - | - |
| புரள்வு வரி | 2,611,068,311 | 1,271,691,854 | 2,611,068,311 | 1,271,691,854 | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 945,024,420 | 1,038,025,892 | 945,024,420 | 1,038,025,892 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 1,538,591,036 | 627,138,614 | 1,538,591,036 | 627,138,614 | - | - |
| தேச பாதுகாப்பு பங்களிப்பு | 22,443,029 | 6,561,055 | 22,443,029 | 6,561,055 | - | - |
| நலன் வரி | 851,542 | 473,924 | 851,542 | 473,924 | - | - |
| நன்கொடை வரி | 2,409 | 1,204 | 2,409 | 1,204 | - | - |
| சமூக பொறுப்பு அறவீடு | 2,111,474 | 154,110 | 1,864,758 | 147,171 | 246,716 | 6,939 |
| திரண்ட தண்டப்பணம் | - | 283,067,976 | - | 115,718,169 | - | 167,349,807 |
| மொத்தம் | **128,979,462,342** | **81,096,880,572** | **111,700,944,745** | **71,338,247,212** | **17,278,517,597** | **9,758,633,360** |

குறிப்பு:

i. தவறவிடப்பட்ட மொத்த வரிகள் உரிய வரிகளின் தற்போதைய திரண்ட மீதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மேலே வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான தவறவிடப்பட்ட வரிகள் முழுமையான நிலுவையாக இருக்கமாட்டாது.

